இந்த விலைக்கழிவு நாரஹேன்பிட்ட எலைற்ரேடியோ காட்சியறையில் மற்றும் shop.eliteradio.com மூலமான கொள்வனவுகளுக்கு மட்டும் வழங்கப்படும்.
Ceiling
Pedestal
Table
Orbital
Wall
Exhaust
KDK
SINCE 1909 JAPAN
ELITERADIO
Since 1959
facebook.com/kdksrilanka | shop.eliteradio.com
வார நாட்களில்: 9:00am - 5:00pm | சனிக்கிழமை: 9:00am - 1:00pm

Follow us
# தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
மலர் : 04, இதழ்: 39 சோபகிருது வருடம், ஆடி மாதம் 30ஆம் திகதி செவ்வாய்க்கிழமை
(15.08.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 27, 0115 886187 - பக்கங்கள் 12
விலை ரூ.50

BEAT THE HEAT
The Reliable Fan
1st August to 31st August 2023
DISCOUNT 15% (On selected models only) Cash or Card
*Conditions apply
KDK
SINCE 1909 JAPAN
Ceiling | Pedestal | Table | Orbital | Wall | Exhaust
ELITERADIO
Since 1959
Inquiries (011) 250 0823 | (011) 236 8472 / 73 / 74

# சமஷ்டி முறைமை தீர்வே சாத்தியம்!



## மாகாணத் தேர்தலுடன் முழுமையாக 13ஐ அமுல்படுத்த வலியுறுத்தி ஜனாதிபதி ரணிலுக்கு சம்பந்தன் கடிதம்



சமஷ்டிக் கட்டமைப்பிலேயே அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சாத்தியம் என்ற நிலைப்பாட்டில் வேறு சமரசம் அல்லது விட்டுக்கொடுப்புச் செய்து கொள்ளாமல் அரசமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் விரைவாக நடைமுறைப்படுத்தவும் நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்ட மாகாண சபைத் தேர்தலை நடத்தவும்...

02 பக்கம்

## செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல்
### கண்ணீரில் தோய்ந்தது வள்ளிபுனம்





விஜயரத்தினம் சரவணன்

செஞ்சோலைப் படுகொலையின் 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று (14) முல்லைத்தீவு - வள்ளிபுனம் பகுதியில் உணர்வெழுச்சியுடன் முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில், கடந்த 2006.08.14அன்று இலங்கை விமானப் படையினரால்...

02 பக்கம்

## உஷ்



ஜனாதிபதி செயலகத்தின் கடிதத் தலைப்புகளை கையாள்வது தொடர்பில் விசேட சுற்றறிக்கை ஒன்று வெளியாகவுள்ளதாம்.

அந்தக் கடிதத் தலைப்புகளை பயன்படுத்தி சிலர் வெளிநாட்டு தூதரகங்களுக்கு விசா கோரிக்கை விடுத்திருப்பதும் பலருக்கு நற்சான்றிதழ்களை வழங்க பயன்படுத்தியிருப்பதும் தெரியவந்துள்ளதால் இந்த புதிய சுற்றறிக்கையை வெளியிட பணித்துள்ளாராம் ஜனாதிபதி ரணில்.

## தமிழரின் தலை பற்றி பேசும் மேர்வினின் தலை சுகமில்லை என்பது நாடறிந்த கதை
### மனோ கணேசன் எம்.பி. விளாசல்



தமிழரின் தலையைக் கொய்து வருவேன் என கொக்கரிக்கும் மேர்வின் சில்வாவுக்கு தலையில் சுகமில்லை என்பது நாடறிந்த சங்கதி. கூடவே ராஜபக்ஷ குடும்பத்தை திருடர்கள், தரகுப் பணம் பெற்றவர்கள் என்கிறார். அந்தக் குடும்பத்துடனேயே மேர்வின் சில்வா குடும்பம் நடத்தினார் என்பதும் நாடறிந்த சங்கதி. ஒருவேளை அத்தகைய திருட்டு தரகுப் பணம் பெறும் பிரச்சினையால், ராஜபக்ஷக்களுடன் நடத்திய குடும்பம் பிரிந்ததோ என்ற கேள்வியும் எப்போதும் இந்நாட்டு மக்கள் மனங்களில் இருக்கும் சங்கதி.

எல்லாவற்றையும் மிஞ்சிய உலகமகா கேலிக்கூத்து என்னவென்றால், உலகத்துக்கு...

02 பக்கம்

## கல்வி, சுகாதாரத்தை தனியார் மயமாக்க இடமளிக்கமாட்டேன்
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சம்மாந்துறையில் சூளுரை



கல்வியையும் சுகாதாரத்தையும் தனியார் மய மாக்க இடமளியேன் என்றும் நாட்டின் ஏழ்மை 40 இலட்சமாக அதிகரித்து விட்டதாகவும் இதில் அரசாங்கத்துக்கு எத்தகைய அக்கறையும் இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

02 பக்கம்

## , ரூபாவுக்கு மாம்பழம் ஏலம்

வவுனியா, தவசிக்குளம் பகுதியில் உள்ள ஆலயத்தில் நேற்றுமுன்தினம் (13) இடம்பெற்ற விசேட பூஜையின்போது மாம்பழம் ஒன்று 95 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

தவசிக்குளம் ஸ்ரீ விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற பூஜையின் பின்னர் பூஜைத்தட்டு, பழங்கள் ஆகியன ஏலத்தில் விடப்பட்டன. இந்நிலையிலேயே அங்கு மாம்பழம் ஒன்று 95 ஆயிரம் ரூபாவுக்கு ஏலத்தில்...

02 பக்கம்

## இந்தியாவுக்கான புதிய உயர்ஸ்தானிகர் ஷேனுகா



இந்தியாவுக்கான இலங்கையின் அடுத்த உயர்ஸ்தானிகராக ஷேனுகா செனவிரத்னவை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துள்ளார்.

வெளிவிவகார அமைச்சின் முன்னாள் செயலாளரான ஷேனுகா தற்போது ஜனாதிபதி செயலகத்தின் வெளிநாட்டு ஊடகங்கள் தொடர்பான பணிப்பாளராக....

02 பக்கம்

## அரசியலமைப்புத் திருத்தம் ஊடாக தமிழீழம் உருவாக்க புதிய முயற்சி
### முன்னாள் படைத்தளபதி ஜகத் டயஸ் சாடல்



அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக ஈழத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றனவா என முன்னாள் இராணுவ பிரதானி லெப். ஜெனரல் ஜகத் டயஸ் கேள்வி எழுப்பியுள்ளார்.

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப் படுத்துவதற்கு எதிராக கொழும்பு தும்முல்லை சம்புத்த ஜயந்தி விகாரையில் நடத்திய கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது,

13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவது, வடக்கு கிழக்கில் தனிநாடு...

02 பக்கம்



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று (14) பக்திபூர்வமாக இடம்பெற்றது.
படம் - யாழ். நிருபர்

## கமெண்ட் கந்தர்...



சம்பந்தன் ஐயாவும் கடிதம் எழுதிக்கொண்டுதான் இருக்கிறார்.. அவங்களும் வாசிச்சுக் கொண்டுதான் இருக்குறாங்கள்.. ஆனா நடந்தது ஒண்டுமில்ல பாருங்கோ.

## பெற்றோரும் இரு பிள்ளைகளும் விஷம் அருந்தியதால் ஆபத்து
### மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதி

ரம்புக்கனை, பத்தம்பிட்டிய பிரதேசத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் விஷம் அருந்திய நிலையில் நேற்று திங்கட்கிழமை (14) காலை மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ரம்புக்கனை பொலிஸார் தெரிவித்தனர். ரம்புக்கனை, பத்தம்பிட்டிய கிராமத்தில் வசிக்கும் 28 வயதுடைய தந்தை, 27 வயதுடைய தாய் மற்றும் அவர்களது இரண்டு பிள்ளைகள் ஆகியோரே மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மாவனல்லை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் தாய், தந்தை இருவரும் வீட்டில் இருந்த தமது இரண்டு பிள்ளைகளுக்கும் விஷம் கொடுத்துவிட்டு தாமும் அருந்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அவர்கள் வீட்டில் மயங்கிய...

02 பக்கம்

## இலங்கை அகதிகள் உட்பட 160 பேர் போலந்தில் கைது
### பெலாரஸ் எல்லையை கடக்க முற்பட்டபோது சம்பவம்

போலந்து - பெலாரஸ் எல்லையைக் கடக்க முயன்ற இலங்கையர்கள் உட்பட 160 பேர் போலந்து எல்லை பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சோமாலியா, எகிப்து, எத்தியோப்பியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த அகதிகளே இவ்வாறு எல்லையைக் கடக்க முற்பட்டுள்ளனர்.

இவர்கள் கடந்த சனிக்கிழமை போலந்து எல்லைப் பாதுகாப்பு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை அழைத்துச்சென்றதான குற்றச்சாட்டில் நான்கு சிரிய பிரஜைகள், மூன்று பங்களாதேஷ் மற்றும் உக்ரைனிய பிரஜை ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளதாக போலந்து எல்லை...

02 பக்கம்

# அஸ்வெசும – சமுர்த்தி திட்டங்களை ஒன்றிணைப்பது தொடர்பில் கோபா குழுவில் கலந்துரையாடல்





இலங்கை சமுர்த்தி அதிகார சபையிலிருந்து ஓய்வுபெற்ற அதிகாரிகள் குழுவொன்றுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (கோபா குழு) கவனம் செலுத்தியது.

சிறுவர் மற்றும் பெண்கள் விவகார மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு மற்றும் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் என்பன அண்மையில் கோபா குழு முன்னிலையில் அழைக்கப்பட்ட போது வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராயும் நோக்கில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு அதன் தலைவர் இராஜாங்க அமைச்சர் லசந்த அலகியவண்ண தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்விடயம் குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

இங்கு, 26.05.2023ஆம் திகதி கோபா குழு கூடியபோது இலங்கை சமுர்த்தி அதிகார சபையினால் நியமனம் வழங்கப்பட்டதிலிருந்து ஓய்வூதியத்துக்கான உரிமை பெற்ற அதிகாரிகள் குழுவுக்கு ஓய்வூதியம் வழங்கப்படாமை தொடர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது. அன்றையதினம் வழங்கப்பட்ட அறிவுறுத்தல் நிறைவேற்றப்பட்டதா என்பது குறித்து இங்கு விசாரணை செய்யப்பட்டது. இருந்தபோதும் குறித்த அறிவுறுத்தல் தொடர்பில் திருப்தியடையும் வகையில் தீர்வு வழங்கப்படவில்லை என்பதை குழுவின் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அத்துடன், சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் நிர்வாகப் பிரச்சினைகள் இருப்பதும் தெரியவந்திருப்பதாக உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

மேலும், ஓய்வூதியம் வழங்குவது தொடர்பாக நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை அமுல்படுத்தாதது குறித்து கோபா குழு கேள்வி எழுப்பியது. பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் இது தொடர்பில் சட்டமா அதிபரிடம் கேட்டபோது, நீதிமன்ற உத்தரவை நடைமுறைப்படுத்துமாறு சட்டமா அதிபர் பணிப்புரை வழங்கியிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய, இந்த விடயத்தை கையாள முடியும் எனக் கோபா குழுவின் தலைவர் இங்கு குறிப்பிட்டார். இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் கலந்துரையாடி அதற்கான பதில்களை எதிர்வரும் செப்டெம்பர் 01ஆம் திகதிக்கு முன்னர் கோபா குழுவுக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் பரிந்துரைத்தார். அத்துடன், இத்திணைக்களத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை தொடர்பான பிரச்சினை தொடர்பில், இம்மாதம் 16ஆம் திகதிக்கு முன்னர், அமைச்சின் செயலாளருக்கு முடிவொன்றை அனுப்பிவைக்குமாறும் கோபா குழு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்துக்கு ஆலோசனை வழங்கியது.

மேலும், சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட பணிகளின் செயல்திறன் மற்றும் குறிப்பிட்ட பணி இலக்குகளை வழங்குவது குறித்தும் கவனம் செலுத்துமாறும் கோபா குழு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியது. வலய மற்றும் பிரதேச மட்டங்களில் சமுர்த்தி உத்தியோகத்தர்களுக்கான இலக்குகளை நிர்ணயித்து, அந்தச் செயற்பாடுகளின் செயல்திறனை அவ்வப்போது கண்காணித்து, வருட இறுதியில் மதிப்பீடு செய்யுமாறு கோபா குழுவின் தலைவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அத்துடன் அஸ்வெசும வேலைத்திட்டம் மற்றும் சமுர்த்தி வேலைத்திட்டம் என்பவற்றை இணைந்து செயற்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாக குறைந்த வருமானம் பெறுவோருக்கு அஸ்வெசும திட்டத்தின் ஊடாக மானியம் வழங்கப்படுவதாகவும் அதே குறைந்த வருமானம் பெறுவோர் சமுர்த்தி திட்டத்தின் ஊடாக வலுவூட்டப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே இந்த இரண்டு திட்டங்களையும் கூட்டாக செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை கோபா குழு வலியுறுத்தியது.

இது தவிர, சமுர்த்தி வங்கிகளின் பங்களிப்பு மற்றும் அஸ்வெசும கொடுப்பனவை சமுர்த்தி வங்கிகள் ஊடாக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டன.

இக்கூட்டத்தில், இராஜாங்க அமைச்சர்களான பிரசன்ன ரணவீர, சுரேன் ராகவன், டயானா கமகே, பாராளுமன்ற உறுப்பினர்களான திஸ்ஸ அத்தநாயக்க, சிவஞானம் ஸ்ரீதரன், ஜே.சி. அலவத்துவல, வீரசுமண வீரசிங்ஹ, இசுரு தொடங்கொட, கலாநிதி மேஜர் பிரதீப் உந்துகொட, மஞ்சுளா திசாநாயக்க மற்றும் கலாநிதி ஹரிணி அமரசூரிய ஆகியோர் கலந்துகொண்டனர்.

# டெங்கு ஒழிப்பு வாரம் ஆரம்பம்!

(யாழ்.நிருபர்)



டெங்கு ஒழிப்பு வாரம் நேற்றிலிருந்து (14) ஆரம்பமாகியுள்ளது. அந்தவகையில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேனவின் பணிப்பின் பேரில் வடக்கு மாகாணம் முழுவதும் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் ஆரம்பமாகியது.

அந்தவகையில், சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தொல்புரம் மேற்கு பகுதியில் டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டது. உத்தியோகத்தர்கள் வீடு வீடாக சென்று டெங்கு பரவும் வகையிலுள்ள பொருட்களை அகற்றுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கினர்.



இதில் சங்கானை பொது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொது சுகாதார பரிசோதகர்கள், சங்கானை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் ஊழியர்கள் இந்த டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தில் பங்கெடுத்தனர்.

# வாகன விபத்தில் ஒருவர் படுகாயம்

(பு.கஜிந்தன்)

கோப்பாய் சந்தியில் வீதி சமிக்ஞையை கருத்தில் கொள்ளாமல் கட்டுப்பாட்டை மீறி பயணித்த ரிப்பர் ரக வாகனம் மோதி சமுர்த்தி முகாமையாளர் ஒருவர் நேற்று (14) படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில், அவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

படுகாயம் அடைந்த பெண் கோப்பாய் சமுர்த்தி வங்கியின் முகாமையாளர் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பகுதியில் பொதுமக்கள் ஒன்று கூடியுள்ளதால் வீதி போக்குவரத்து தடைப்பட்டிருந்தது.

## இந்தியாவுக்கான...

கடமையாற்றி வருகிறார்.

இந்தியாவுக்கான இலங்கையின் உயர்ஸ்தானிகராக கடமையாற்றி வரும் மிலிந்த மொரகொடவின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முடிவடையவுள்ள நிலையில் அவர் நாடு திரும்பவுள்ளார்.

## பெற்றோரும்...

நிலையில் கிடப்பதைக் கண்ட அயலவர்கள், அவர்கள் நால்வரையும் முச்சக்கரவண்டியில் கொண்டு சென்று, மாவனல்லை வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இரண்டு குழந்தைகளுக்கும் பெற்றோரே விஷம் கொடுத்தமைக்கான காரணம் இதுவரையில் தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

## இலங்கை அகதிகள்...

பாதுகாப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சட்டவிரோத எல்லைக் கடத்தல்களுக்கு உதவியதற்காக இந்த ஆண்டு ஏற்கனவே 500 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறும் போலந்து பொலிஸார், கடந்த ஆண்டு முதல் இந்த ஆண்டு ஜனவரி வரையான காலப்பகுதியில் 16ஆயிரம் முதல் 19 ஆயிரம் பேர் வரையான சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

போலந்துக்குள் சட்டவிரோத குடியேற்றவாசிகளின் வருகை அதிகரித்து வருவதால் எல்லை பாதுகாப்புகளை பலப்படுத்த போலந்து அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன், மேலதிகமாக ஆயிரம் எல்லை பாதுகாப்பு பொலிஸார் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளதாகவும் போலந்து ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## 95,000 ரூபாவுக்கு...

எடுக்கப்பட்டதாக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

இந்த மாம்பழத்தை லண்டனைச் சேர்ந்த தம்பதியினர் பெற்றுக் கொண்டுள்ளதாகவும் இதுவரை இவ்வளவு பெரிய தொகைக்கு பழங்கள் ஏலத்தில் எடுக்கப்படவில்லையெனவும் அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



இவ்வாறு ஏலத்தின்மூலம் பெறப்படும் பணம் ஆலய அபிவிருத்தித் திட்டங்களுக்கு பயன்படுத்தப்படவுள்ளதாகவும் ஆலய நிர்வாகத்தினர் மேலும் குறிப்பிட்டனர்.

## தமிழரின் தலை...

அஹிம்சையை போதித்த போதிசத்வர் பெயரில் இவர் தமிழர்களின் தலையை வெட்டுவாராம். இவரை போன்றவர்களிடமிருந்து பௌத்தத்தை போதித்தவர்தான் மீண்டும் பிறந்து வந்து காப்பாற்ற வேண்டும் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியதாவது,

முன்னைய ராஜபக்ஷ ஆட்சி காலத்தில், ஊடகவியலாளர்களின் கால்களை உடைப்பேன் என்றும் இவர் சொன்னார். அப்புறம் அரச ரூபவாஹினி கூட்டுத்தாபனத்துக்கு சென்று தன் தலையையே உடைத்துக்கொண்டு வந்தார். பின்னர் தேர்தலில் போட்டியிட்டு சிங்கள மக்களாலேயே அரசியலில் இருந்து விரட்டப்பட்டார்.

நாட்டில், விகாரைகளையோ கோவில்களையோ பள்ளிகளையோ தேவாலயங்களையோ கட்டுவிப்பதில், பூஜைகளை செய்வதில் இடைஞ்சல்கள் ஏற்பட்டால், அதை சட்டப்படி அணுக வேண்டும். அந்த சட்டமும் அனைவருக்கும் பொதுவாக இருக்க வேண்டும்.

தமிழர் தலைகளை கொய்து வருவேன் என்ற இப்படி தலை வெட்டும் காலம் எல்லாம் இப்போது மலையேறி விட்டது. இவரை பாரதூரமானவராக எடுக்க தேவையில்லை. ஆனால், இவரது கருத்து, பாரதூரமானது. நாட்டில் இன மத குரோதத்தை உருவாக்கும் கருத்து. இவருக்கு எதிராக சட்டம் பாய வேண்டும். அரசில் இருக்கும் தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகள் இதுபற்றி தங்கள் தலைவர்களான ராஜபக்ஷ, ரணில் விக்கிரமசிங்க ஆகியோரிடம் புகார் செய்ய வேண்டும்.

## செஞ்சோலைப்...

மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் முகாமைத்துவ கற்கைநெறியில் ஈடுபட்டிருந்த 53மாணவியர்களும் நான்கு பணியாளர்களும் படுகொலை செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு படுகொலை செய்யப்பட்டவர்களுடைய 17ஆம் ஆண்டு நினைவேந்தல் நேற்று முல்லைத்தீவு வள்ளிபுனம் பகுதியில் உணர்வெழுச்சியுடன் மேற்கொள்ளப்பட்டது.

தாயக மற்றும் புலம்பெயர் உறவுகளின் அனுசரணையுடன் தாய்த்தமிழ் பேரவையின் ஆதரவுடன் மேற்கொள்ளப்பட்ட இந்த அஞ்சலி நிகழ்வு பொதுச்சுடர் ஏற்றப்பட்டு ஆரம்பமானது.

அந்தவகையில், இந்த படுகொலைச் சம்பவத்தின்போது உயிர்நீத்த உடையார்கட்டு மகா வித்தியாலய மாணவியர்களான கனகலிங்கம் நிருஷா, கனகலிங்கம் நிருபா ஆகிய சகோதரிகளின் தாயார் கனகலிங்கம் தவமணி பொதுச்சுடரினை ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வில் தொடர்ந்து படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த மாணவியர்களுக்கும் பணியாளர்களுக்கும் அவர்களுடைய உறவினர்களால் ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலை அணிவிக்கப்பட்டு, மலர்தூவி, கண்ணீர் சொரிந்து உணர்வெழுச்சியுடன் அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து அகவணக்கம் இடம்பெற்று, பொதுமக்களின் மலர்வணக்கம் என்பனவும் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், முன்னாள் கரைச்சி பிரதேச சபை உறுப்பினர் சண்முகராஜா ஜீவன், முன்னாள் கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் இரத்தினம் ஜெகதீசன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர் அன்ரனி ஜெயநாதன் பீற்றர் இளஞ்செழியன், சமூக செயற்பாட்டாளர்கள், படுகொலை செய்யப்பட்டவர்களின் உறவுகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சமஷ்டி முறைமை...

நாம் விவரித்துள்ளபடி, தமிழ் மக்களின் அபிலாஷைகளின் அடிப்படையிலும் மற்றும் தொடர்ந்து வந்த அரசுகளினால் தீர்வுக்காக வழங்கப்பட்ட பல்வேறு உறுதிமொழிகளுக்கு இணங்கவும் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கு தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்கவும் ஜனாதிபதியாகிய தங்களைக் கோருகின்றோம்.

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் நேற்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்திருக்கின்றார்.

13ஆவது அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பில் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளின் நிலைப்பாட்டை அறியத்தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். அதற்கான காலக்கெடு இன்று முடிவடையவுள்ள நிலையில், சம்பந்தன் தமது ஐந்து பக்கக் கடிதத்தை நேற்று அனுப்பி வைத்தார்.

அதில், சுதந்திரம் பெற்ற காலம் முதல் குறிப்பாக 1956 முதல் தமிழர்கள் சமஷ்டி அடிப்படையான தீர்வே தங்கள் அபிலாஷை என்பதை எல்லாத் தேர்தல்களிலும் மாறாமல் வலியுறுத்தி வந்திருக்கிறார்கள் என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இடையில் அவர்கள் தனிநாட்டு கோரிக்கையையும் கூட வலியுறுத்தினர் என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அர்த்தமுள்ள எந்தத் தீர்வும் சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது இந்தக் கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளது.

தமிழரின் தேசிய இனப் பிரச்சினை மற்றும் அவர்களின் நியாயமான அபிலாஷைகள் தொடர்பில் கடந்து வந்த ஒவ்வொரு அரசுகளும் அளித்த வாக்குறுதிகள் மற்றும் முயற்சிகள் இந்த கடிதத்தில் விவரிக்கப்பட்டுள்ளன.

1983 முதல் இந்த விடயத்தில் இந்தியா வழங்கி வரும் பங்களிப்பும் விவரிக்கப்பட்டுள்ளது.

இவற்றின் அடிப்படையில், தமிழ் மக்களின் அபிலாஷைகளின் உட்கிடக்கைகளைப் புரிந்து கொண்டு, அவற்றுக்கு இணங்கவும் பல்வேறு அரசுகள் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பில் காலத்துக்கு காலம் வழங்கி வந்த உறுதிமொழிகளைக் கவனத்தில் எடுத்தும் தமிழரின் தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் நடவடிக்கையை விரைந்து முடிக்குமாறு சம்பந்தன் வலியுறுத்தியுள்ளார்.

## கல்வி, சுகாதாரத்தை...

நாட்டிலுள்ள அனைத்தும் ஏலம் விடப்படுவது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருவதாகவும் ரூபவாஹினி நிறுவனத்துக்கு சொந்தமான ஐ சேனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சுமத்தினார்.

அரச பாடசாலைகளுக்கு பஸ்கள் வழங்கும் 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் நேற்று (14) சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்துக்கு 75ஆவது பஸ் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய முதலீட்டாளர்களை அரச ஊடகங்களுடன் இணைக்கும் ஒழுங்குமுறை உள்ளதாகவும் ரூபவாஹினி கூட்டுத்தாபனம் தமது சொந்த சொத்தைப்போல, தான் நினைத்தது போல, நினைத்த நபர்களுக்கு விற்கும் சூதாட்டம் அரங்கேறி வருகின்றது.

நாட்டின் எதிர்கால ஜனாதிபதியாக சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை, பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் அம்பாறை மாவட்டமும் எந்த மதத்தையும் இனத்தையும் ஓரங்கட்டாமல் முழு மாவட்டத்தையும் ஒன்றிணைத்து சிறந்த அபிவிருத்தியை மேற்கொள்வதாகவும் மாவட்டத்தை அபிவிருத்தி செய்யும் பொறுப்பை தான் ஏற்றுக் கொள்வதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

சம்மாந்துறை, கல்முனை, அம்பாறை மற்றும் பொத்துவில் ஆகிய நான்கு தேர்தல் தொகுதிகளும் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கங்களினால் ஓரங்கட்டப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

சம்மாந்துறை வைத்தியசாலைக்கு 30 இலட்சம் பெறுமதியான வைத்தியசாலை உபகரணங்கள் ஏலவே வழங்கப்பட்டுள்ளன. இலங்கை தற்போது வங்குரோத்து நாடாக மாறியுள்ளதுடன், நாட்டில் ஸ்மார்ட் வலுவை கட்டியெழுப்ப வேண்டும் என்றே எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முன்மொழிகின்றது.

நாட்டில் 10 ஆயிரத்து 151 பாடசாலைகள் உள்ளன. பிள்ளைகள் வெவ்வேறு பாடத்திட்டங்களை கற்கின்றனர். ஆனால், அவை யாவும் பழைய பாடத்திட்டங்கள். அவை புதுப்பிக்கப்பட்டு கல்வியில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

ஆங்கில மொழிக்கல்விக்கு முன்னுரிமை அளிப்பது அவசியம். மொழி ஆய்வு கூடங்கள் நிறுவப்பட வேண்டும். தகவல் தொழில்நுட்பத்துறைக்கு பிள்ளைகள் அனுப்பப்பட வேண்டும் என்றும் சஜித் பிரேமதாச குறிப்பிட்டார்.

ஒரு நாடாக முன்னோக்கிச் செல்வதற்கு நாம் பசுமை அபிவிருத்தியை நோக்கிச் செல்ல வேண்டும். பசுமை அபிவிருத்தியை நோக்கிச் செல்ல சுற்றுச்சூழலைப் பேணுவது அவசியமானது. நாட்டின் அபிவிருத்தி நிலைபேறானதாக இருக்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் உள்ள பாடசாலைகளில் நவீன தொழில்நுட்பப் போக்குகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். கொவிட் காலத்தில் பிள்ளைகள் கற்பதற்கு கையடக்கத் தொலைபேசிகள் கூட இருக்கவில்லை என குறிப்பிட்ட அவர், இணைய வழி தொடர்பைப் பெறுவதற்கு பிள்ளைகள் மரங்கள் மற்றும் பாறைகளில் ஏற வேண்டியிருந்தன. சிலர் மேடைகளில் ஏறி, தகவல் தொழில்நுட்பப் புரட்சியை உருவாக்க வேண்டும் என்று சத்தமாக கூறுகின்றனர். பாடசாலை மாணவர்களுக்கு கணினி வாங்கும் அளவுக்கு பொருளாதாரம் வலுவாக இல்லை என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

நாட்டின் வளங்கள் 24 மணி நேரமும் விற்கப்படுகின்றன. இது அரசாங்கத்தின் கொள்கையாக இருந்து வருகின்றது. ரூபவாஹினி நிறுவனத்துக்கு சொந்தமான ஐ சேனலை விற்கவோ அல்லது குத்தகைக்கு விடவோ தயாராகி வருவதாக கூறப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் கல்வியையும் சுகாதாரத்தையும் தனியார் மயமாக்க இடமளியேன் என்றும், நாட்டின் ஏழ்மை 40 இலட்சம் அதிகரித்து விட்டதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

இதில் அரசாங்கத்துக்கு எத்தகைய அக்கறையும் இல்லை என்றும், புதிய வளமான நாட்டை உருவாக்க, புதிய இளைஞர்களை பலப்படுத்த, நாட்டின் குடிமக்களை பலப்படுத்த அனைவரும் ஒன்றாய் கைகோர்ப்போம் என எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## அரசியலமைப்புத் திருத்தம்...

உருவாவதற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்திருக்கின்றீர்களா?

விக்கிரமசிங்க, ராஜபக்ஷ அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நாடு பிளவுபடுவதற்கு வழிவகுக்கும் என்பதால் அதனை அவசரமாக எதிர்க்கவேண்டிய தேவை உள்ளதாக நான் உணர்கிறேன்.

தங்கள் உயிர்களை பணயம்வைத்து விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதற்காக 2009இல் போரிட்டவர்கள் பிரிவினைவாத நிகழ்ச்சி நிரலை ஊக்குவிக்கும் தற்போதைய நிகழ்ச்சி நிரலை எதிர்க்கின்றனர்.

தேசிய பாதுகாப்பை புறக்கணித்துவிட்டு சில இராணுவத்தளங்களை மூடுவது, தொல்பொருளுடன் தொடர்புள்ள இடங்களை கைவிடுவது, பொதுச்சொத்துகளை தனியார் மயப்படுத்துவது, இராணுவத்தை பலவீனப்படுத்துவது போன்ற நடவடிக்கைகள் நாட்டை பிளவுபடுத்தும் சூழலை ஏற்படுத்துவதை நோக்கமாக கொண்டவை அல்லவா?

இந்திய - இலங்கை உடன்படிக்கையில் தனக்குள்ள கடப்பாட்டினை இந்தியா நிறைவேற்றத்தவறிவிட்டதால் இலங்கைமீது திணிக்கப்பட்ட 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதை நியாயப்படுத்த முடியாது.

ஆகவே, இலங்கை அந்த உடன்படிக்கையை மதிக்க வேண்டியதில்லை என கஜபா படைப்பிரிவை சேர்ந்த முன்னாள் அதிகாரி தெரிவித்துள்ளார்.

1987ஆம் ஆண்டு யாழ் குடாநாட்டில் வடமராட்சி பிரதேசத்தில் படையினர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவரை பிடிக்கும் நிலையிலிருந்தனர். அந்த சமயத்தில்தான் இலங்கை - இந்திய உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

இந்திய - இலங்கை உடன்படிக்கையின்படி விடுதலைப் புலிகளின் ஆயுதங்களை களைய முடியவில்லை. இதன் காரணமாக இலங்கை இந்த உடன்படிக்கையை மதிக்கவேண்டியதில்லை. ஆனால், இப்போது உருவாகி வரும் அச்சுறுத்தல் குறித்து நாடு விழிப்படைய வேண்டும் - என்றார் ஜகத் டயஸ்

# யாழ். பல்கலையில் இடம்பெற்ற செஞ்சோலை நினைவேந்தல்





செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று (14) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பிரதான வளாகத்தில் நடைபெற்றது.

யாழ். பல்கலைக்கழக பிரதான தூபி வளாகத்தில் ஒன்றுகூடிய மாணவர்கள் உயிர்நீத்த பாடசாலை மாணவர்களின் உருவப்படத்துக்கு மலரஞ்சலி செலுத்தி ஈகை சுடரேற்றி ஒரு நிமிட அகவணக்கமும் செலுத்தினர்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 63 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர்.

# நாட்டில் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களின் முதலீடுகளை ஊக்குவிக்க வேண்டியது அவசியம்

## முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் வலியுறுத்து





வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்கள் இலங்கையில் உயர் கல்வித் துறையில் முதலீடுகளை மேற்கொள்ள வாய்ப்பளிக்கப்பட வேண்டுமென ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற துருக்கி கிர்னே அமெரிக்கப் பல்கலைக்கழகத்தோடு ஒன்றிணைந்துள்ள மெற்றோபொலிட்டன் கல்லூரி நடத்திய சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நாட்டின் உயர் கல்வித் துறையை மேம்படுத்துவதற்கான பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அங்கத்தவர் ஒருவராக என்னையும் கடந்த ஆண்டு நியமித்திருந்தார்கள். ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி, உயர் கல்வி ஆகிய வற்றின் மீது எங்களது கவனம் திரும்பியிருந்தது.

பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள், தேசிய கல்வி ஆணைக்குழுவினர், தேசிய கல்வி நிறுவனத்தினர் உட்பட உயர் கல்வித் துறையோடு சம்பந்தப்பட்ட பல தரப்பினரையும் அழைத்து நாங்கள் நிலைமையை நன்றாக ஆராய்ந்தோம். அதனடிப்படையில் எங்களது முடிவுகளை நாங்கள் முழுமைப்படுத்தி, விதந்துரைகளை முன்வைத்துள்ளோம். அவற்றை இனி பொது மக்கள் அறியக்கூடியதாக இருக்கும்.

பல்கலைக்கழக கற்கைநெறிகளின் தர நிர்ணயம் மற்றும் அவற்றுக்கான உத்தரவாதம், அங்கீகாரம் என்பனவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியவையாகும்.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு ஒரு கண்டிப்பான நிலைப்பாட்டைக் கடைப்பிடித்து வருகின்றது. பல்கலைக்கழக கல்விசார் மற்றும் நிருவாகச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை நாட்டிலுள்ள ஒவ்வொரு பல்கலைக்கழகமும் சுயமாக தனித்து செயல்படுவதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். அத்துடன், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்ற கட்டமைப்பு மாற்றியமைக்கப்பட வேண்டும் .

சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் இருந்தும், சுதந்திரத்துக்குப் பின்னரும் இலங்கை கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்திருக்கிறது. இலங்கை பலவற்றில் முன்னிலையில் திகழ்கின்றது. சர்வஜன வாக்கெடுப்பு, பெண்களுக்கான வாக்கெடுப்பு, இலவசக் கல்வி போன்றவற்றில் பிராந்தியத்தில் இலங்கை முன்னிலையில் இருந்துள்ளது.

ஜனாதிபதியும் அவரது அண்மைய பாராளுமன்ற உரையில் மாகாண சபைகளும் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு முன்வர வேண்டும் என்று ஆலோசனை தெரிவித்திருக்கிறார். இவ்வாறான கருத்திட்டங்கள் உள்ளன.

பல்கலைக்கழக கல்வி முறை அரசியலில் இப்பொழுது ஒரு பேசுபொருளாக மாறி இருக்கிறது. வெளி நாட்டுப் பல்கலைக்கழகங்களின் பிரவேசம் இலங்கையின் இலவசக் கல்வி திட்டத்துக்குப் பாதிப்பை உண்டுபண்ணும் என்ற ஒருவிதமான அச்சத்தையும், எதிர்ப்பையும் ஒருசாரார் தெரிவித்து வருகிறார்கள். அதில் உண்மையில்லை - என்றார்.

மெற்றோபொலிட்டன் கல்லூரியின் தலைவர் கல்முனை முன்னாள் நகரபிதா கலாநிதி சிராஸ் மீராசாஹிப் நிகழ்வுக்குத் தலைமை தாங்கினார். அத்துடன், துருக்கி கிர்னே அமெரிக்கப் பல்கலைக்கழகத்தின் உப தலைவர் பேராசிரியர் இஸ்மத் இஸினே மற்றும் பிரபல தொழில் அதிபரும், தெரண மற்றும் லிபர்ட்டி ஊடக வலையமைப்புகளின் தலைவருமான திலித் ஜயவீர ஆகியோரும் இந்த நிகழ்வில் உரையாற்றியிருந்தனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 30ஆம் நாள் செவ்வாய்க்கிழமை**

**மேஷம்:** எதிர்பாராத சில விபத்துகளில் சிக்கலாம். வீடு, வாகனம் வாங்குவதும் விற்பதும் இன்றைய நாளில் கூடாது.

**ரிஷபம்:** நெருங்கிய நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மன உறுதியுடன் அனைத்தையும் வெற்றிகொள்வீர்கள்.

**மிதுனம்:** குதர்க்கமாக பேச்சால் அவமானம். அபகீர்த்தி ஏற்படும், உங்களால் குடும்பத்தில் குழப்ப நிலைகள் உருவாகலாம்.

**கடகம்:** குடும்பத்தில் மங்கள காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சி பிறக்கும். நோயிலிருந்து விடுதலை அடைவீர்கள்.

**சிம்மம்:** தேவையற்றவர்களின் நட்பால் தொல்லைகள் உருவாகும். உணவு. உறக்கம் தேடிப் போனாலும் கிடைக்காது.

**கன்னி:** தொழில் வியாபாரத்தில் அதிக இலாபங்களைப் பெறுவீர்கள். எதிர்பாராத தன வரவால் மகிழ்ச்சி அடைவீர்கள்.

**துலாம்:** தொழில் மூலமாக பதவி உயர்வுகள். சம்பள உயர்வுகள் அமையும். புதிய பதவிகள் வந்து சேரும்.

**விருச்சிகம்:** பூர்வீக சொத்து'களால் வில்லங்கம் ஏற்படும். தந்தைக்கும் உங்களுக்குமிடையிலான உறவு பாதிக்கப்படும்.

**தனுசு:** திட்டமிட்ட காரியங்கள் அனைத்தும் மந்த நிலையை அடையும், வாய்ப் பேச்சால் வீண் பிரச்சினைகள்.

**மகரம்:** கூட்டுத் தொழில். வியாபாரத்தில் நல்ல லாபம் உண்டு. நீண்ட நாள் உங்கள் மனக்குறை தீரும்.

**கும்பம்:** நினைத்த காரியத்தில் வெற்றி கிட்டும். நோய், கடன், எதிரி இவை எதுமே இன்று உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

**மீனம்:** மனதை ஒரு நிலையில் வைத்துக்கொள்ளுங்கள். புத்திரர்களால் தொல்லையும். கவலையும் தோன்றும்.

**திதி:** சதுர்த்தசி பி.இ.12.43 வரை பின் அமாவாசை

**நட்சத்திரம்:** பூசம் பி.ப.1.58 வரை பின் ஆயிலியம்

**யோகம்:** சித்த யோகம்; முழுவதும்;

**வார சூலை:** வடக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** மு.ப. 8.05– 9.05 மணி வரை

**ராகுகாலம்:** 3.05 – 4.35 மணி வரை

**எமகண்டம் :** 8.05–10.35 மணி வரை

**குளிகை:** 12.05 – 1.35 மணி வரை

**சந்திராஷ்டமம்:** தனுசு ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிஷ்டம்:** புனர்பூசம், விசாகம், பூரட்டாதி பூசம், அனுஷம், உத்தரட்டாதி (பிறந்தவர்களுக்கு)

**விஷேட தினம் :** ஆடி அமாவாசை விரதம் - ஆடிச் செவ்வாய்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739



வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாணம் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா நேற்று (14) இடம்பெற்றது.

# இரவுநேர ஓட்டப்பந்தயத்தில் ஈடுபட்ட ஒன்பது பேர் கைது

மோட்டார்சைக்கிள் ஓட்டப் பந்தயத்தில் ஈடுபட்ட ஒன்பது இளைஞர்கள் நேற்று (14) கைதுசெய்யப்பட்டுள்ளதாக பாணந்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

மொரட்டுவ, இதிபெத்த மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் வசிக்கும் 20 முதல் 26 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் குழுவே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

காலியில் நள்ளிரவு 12 மணிக்குப் பின்னர் மோட்டார்சைக்கிள் போட்டி நடைபெறவுள்ளதாக கிடைத்த தகவலின்பேரில் பதுங்கியிருந்த பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்களை கைது செய்தனர்.

இதன்போதே நான்கு மோட்டார்சைக்கிள்களை கைப்பற்றியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# ஐந்தாவது ஆண்டாகவும் Brand Finance இன் தரப்படுத்தலில் மிகவும் மதிப்புமிக்க வர்த்தக நாமமாக Dialog Axiata




உலகின் முன்னணி சுயாதீன வர்த்தக நாம மதிப்பீட்டு ஆலோசனை நிறுவனமான Brand Finance தமது 20ஆவது வருடாந்த ஆய்வில் 'இலங்கையின் மிகவும் மதிப்புமிக்க வர்த்தகநாமம்' எனும் மேன்மைமிகு பட்டத்தை நாட்டின் முன்னணி தொலைத்தொடர்பு இணைப்பு வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பி.எல்.சிஇற்கு ரூ. 52 பில்லியன் வர்த்தக நாம பெறுமதியுடன் தொடர்ந்து ஐந்தாவது முறையாகவும் வழங்கி கௌரவித்துள்ளது. அதற்கமைய இலங்கையின் பலம்பொருந்திய வர்த்தகநாமமாக வளர்ந்திருக்கும் டயலொக், AAA+ ஃபிட்ச் மதிப்பீட்டை பெற்றுள்ளது. அத்துடன், டயலொக்கானது தொடர்ந்து 16ஆவது முறையாக 'மிகவும் மதிப்புமிக்க தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் சுவீகரித்துள்ளது.

இவை மட்டுமின்றி 17 மில்லியன் இலங்கையர்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையை டயலொக் வென்றிருப்பதையும் இலங்கை மக்களின் வாழ்வு மற்றும் நிறுவனங்களை நிலைபேறான டிஜிட்டல் சூழல் அமைப்புகளின் ஊடாக வலுவூட்டி வளப்படுத்தும் நிறுவனத்தின் தீர்க்கமான அர்ப்பணிப்பையும் பறைசாற்றும் விதமாக 'மிகவும் விரும்பப்படும் தொலைத்தொடர்பு வர்த்தகநாமம்' எனும் பட்டத்தையும் தொடர்ந்து 7ஆவது ஆண்டாக சூடிக்கொண்டது.

நாடளாவிய ரீதியில் சமூகத்தில் நல்மாற்றத்தை விளைவிக்கும் பொருட்டு நிறுவனமானது தனது கூட்டாளர்களுடன் இணைந்து நாட்டில் நிலவிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு தீர்வைக் காணும் வகையில் 'தேசிய எரிபொருள் அட்டையை (Fuel Pass)' அறிமுகப்படுத்தியது.

மேலும், தனது பங்காளர்களுடன் கைகோர்த்து நாட்டில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பாதிக்கப்பட்ட 1,20,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குமுகமாக 'மனிதநேய ஒன்றிணைவு' எனும் இலங்கை Brand Finance இன் தலைவர் ருச்சி குணவர்தன உரையாற்றுகையில், "எமது பட்டியலில் தொடர்ந்தும் முதலிடத்தை தக்கவைத்துக்கொண்ட டயலொக்கிற்கு எமது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இது ஏனைய வர்த்தகநாமங்களால் பின்தொடரப்பட வேண்டிய ஒரு முன்னுதாரணமாகும். தொலைத்தொடர்புத் துறையில் பல்வேறு குறிகாட்டிகளினூடாக நாம் மேற்கொண்ட மதிப்பீடுகள் அத்தனையூடாகவும் டயலொக் தனது வர்த்தகநாமத்தின் மதிப்பை அதிகரித்து வர்த்தகநாமத்தின் பலத்தை கட்டியெழுப்பியுள்ளமை புலப்பட்டுள்ளது" என்றார்.

Brand Finance உலகின் முன்னணி சுயாதீனமான வர்த்தகநாம மதிப்பிடல் ஆலோசனை நிறுவனமாகும். இது இலங்கை உட்பட 25 நாடுகளில் தன் அலுவலகங்களை கொண்டியங்கி வருகிறது. Brand Financeஆனது வர்த்தகநாமங்களின் நிதி மதிப்பை அளவிடுதல் மூலம் சந்தைப்படுத்தல் மற்றும் நிதிக்கிடையிலான இடைவெளிக்கு ஒரு பாலமாய் அமைகிறது.

Brand Finance ஆனது தனது லீக் அட்டவணையிலுள்ள வர்த்தகநாமங்களின் மதிப்புகளை Royalty Relief approach எனும் ISO 10668 சான்றுக்கு இணங்கிய ஒரு வர்த்தகநாம மதிப்பீட்டு முறை மூலம் கணக்கிடுகிறது.

# களுத்துறையில் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபரொருவர் கொலை

## சந்தேகநபர்களைத் தேடி பொலிஸார் விசாரணை




தொடங்கொடை பிரதேசத்திலுள்ள வீடொன்றில் நபரொருவர் நேற்று (14) கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாக தொடங்கொடை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடங்கொடை, தொலேலந்த பிரதேசத்தைச் சேர்ந்த 37 வயதுடைய திமுத் சாமிக்க என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் வீடு திருத்தப்பட்டு வரும் நிலையில், மனைவி மற்றும் குழந்தையுடன் மனைவியின் வீட்டில் வந்திருந்த நிலையிலேயே இவ்வாறு கொலைசெய்யப்பட்டுள்ளார்.

அதிகாலை 2.30 மணியளவில் வீட்டின் முன் மற்றும் பின் கதவுகளை உடைத்து உள்ளே நுழைந்த சந்தேக நபர்கள், உயிரிழந்த நபரை கூரிய ஆயுதங்களால் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. தாக்குதலுக்கு இலக்காகி பலத்த காயமடைந்த நபர் தனியார் வாகனம் ஒன்றில் களுத்துறை, நாகொடை போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தார். இருந்தபோதும், வைத்தியசாலையில் சேர்க்கப்படுவதற்கு முன்னரே அவர் உயிரிழந்திருந்ததாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவர்கள் அந்தப் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவரும், சந்தேக நபர்களும் மத்துகம பிரதேசத்திலுள்ள பிரபல போதைப்பொருள் வியாபாரி ஒருவருடன் தொடர்புடையவர்கள் என்றும், கடந்த ஒரு வருடமாக இவர்களுக்கிடையில் பகை இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவத்தில் சந்தேக நபராகக் கருதப்படும் நபர் ஒருவரின் வீட்டுக்கு கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் வேறொரு குழுவினருடன் சென்று உயிரிழந்த நபர் அவரை தாக்கியுள்ளதாகவும் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் களுத்துறை குற்றப்பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பம்பலப்பிட்டியில் பஸ் விபத்து!

## ஏழு பேர் வைத்தியசாலையில் சேர்ப்பு



பம்பலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட, டுப்ளிகேசன் வீதி, ஜூபிலி சந்திக்கு அருகில் கொழும்பிலிருந்து கதிர்காமம் நோக்கி பயணித்த தனியார் பஸ் நேற்று (14) அதிகாலை விபத்துக்குள்ளாகியுள்ளது.

தும்முல்லையிலிருந்து வந்த லொறியில் மோதி பஸ் தடம் புரண்டதால் இந்த விபத்து நேர்ந்துள்ளது.

இந்த விபத்து இடம்பெற்ற சம்பவத்தில் 15 பயணிகள் இருந்துள்ளதுடன், அவர்களில் பெண்கள் இருவர் உள்ளடங்கலாக ஐந்து பேரும் காயங்களுக்குள்ளான நிலையில் சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ், மின்சார சமிக்ஞையை கவனத்திற்கொள்ளாமல் பயணித்தமையின் காரணமாக இந்த விபத்து இடம்பெற்றிருக்கலாம் என முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய சந்தேகிக்கப்படுவதுடன், பம்பலப்பிட்டி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

தமிழன்
THAMILAN தமிழன்
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023 ஓகஸ்ட் 15ஆம் திகதி, செவ்வாய்க்கிழமை



# தலைகளை வெட்டியெறிந்தாலே தமிழர் பிரச்சினை தீர்ந்துவிடும்!

வடக்கு,கிழக்கு பகுதிகளில் உள்ள விகாரைகளில் கை வைப்போரின் தலையை எடுப்பேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளார்.அதாவது, தமிழர்களுக்கு இந்த எச்சரிக்கை நேரடியாகவே விடுக்கப்பட்டுள்ளது.

களனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு பகிரங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

"யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள், எமக்கு இந்தப் பகுதி வேண்டும் எனக் கூறுகின்றனர். கிழக்கில் உள்ளவர்கள் எமக்கு இந்தப் பகுதி வேண்டும் எனக் கூறுகின்றனர்.தெற்கிலுள்ளவர்கள் எமக்கு இந்தப் பகுதி வேண்டும் எனக் கூறுகின்றனர்.

இங்கு பகுதி பகுதியாக ஒன்றும் இல்லை.இது எமது தாய்நாடு.அதற்கான உறுதிப்பத்திரம் எம்மிடமே உள்ளது. நீங்கள் விரும்பினால் எங்களுடன் சமாதானமாக நல்லிணக்கத்துடன் வாழ முடியும். வடக்கிலுள்ள தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு நான் ஒன்றைக் கூறுகின்றேன். பிரபாகரனின் பகையை வைத்துக்கொள்ள வேண்டாம். பிரபாகரன் ஆட்கொலை செய்தார். இந்த நாட்டின் இராணுவத்தினர், பொலிஸாரை கொன்று குவித்தார்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் நான் வடக்கு, கிழக்கிற்கு வருவேன். நீங்கள் விகாரைகள் மீது கை வைக்க வந்தால், நீங்கள் மகாநாயக்கர்கள் மீது கை வைக்க வந்தால், நான் வெறுமனே களனிக்கு வரமாட்டேன். உங்களின் தலையை எடுத்துக்கொண்டு தான் களனிக்கு மீண்டும் வருவேன். எனக்கு பணியாற்றுவதற்கு அமைச்சுப் பதவிகள் தேவையில்லை'' - என்று சவடாலாக பேசியுள்ளார் மேர்வின்.

மேர்வின் சில்வாவின் இந்த உரையானது, இனங்களுக்கிடையில் பதற்றத்தைத் தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ளது என விமர்சனம் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து பொலிஸார் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டிவைத்து தாக்கியமை, முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்து நிறுத்தியமை என இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே மேர்வின் சில்வா வலம் வருகின்றார்.

ராஜபக்ஷர்களின் சகாவாக அவர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மேர்வின் சில்வா, 2015 ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத்தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்காத நிலையில், அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டார்.

மேர்வின் சில்வாவின் இந்தக் கருத்திற்காக அவருக்கு எதிராக ஐ.சி.சி.பி.ஆர்.சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க முடியாதா என சமூக ஊடகங்களில் கேள்வி எழுப்பப்படுகிறது.

அரசாங்கம் நகைச்சுவை கலைஞர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கின்றது தேசிய கீதத்தை தவறாகப் பாடியவர்களை விமர்சிக்கின்றது .இங்கு தமிழர்களின் தலைகளை துண்டிப்பேன் என முன்னாள் அமைச்சர் ஒருவர் வெளிப்படையாகத் தெரிவிக்கின்றார் இவருக்கு எதிராக நடவடிக்கை இல்லையா என சமூக ஆர்வலர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

மேர்வின் சில்வாவின் கருத்தும் - பேச்சும் தமிழர்களுக்கு புதுமையையோ அச்சத்தையோ ஏற்படுத்தவில்லை. வழமையான சிங்கள தேசியவாதிகள் மனதில் வைத்திருப்பதை மேர்வின் பொதுவெளியில் அதுவும் பகிரங்கமாகவே சொல்லியுள்ளார்.தலையை வெட்டுவதும் கடத்திக் கொல்வதும் இவர்களுக்கு கைவந்த கலை என்பது தமிழர்கள் அறியாததல்ல.

ஆனால், தமிழர்களுக்கு அரசியல் தீர்வு ஒன்று வருவதற்கான ஏற்பாடுகள் , பேச்சுகள் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையில் மேர்வின் சில்வாவின் இவ்வாறான கருத்துகள் சாதாரண சிங்கள மக்களையே உசுப்பேற்றும் வகையில் இருப்பதால், அரசாங்கம் இது தொடர்பில் என்ன நிலைப்பாட்டை எடுக்கும் என்பதை நோக்க வேண்டியுள்ளது.

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வை வழங்க பேச்சு நடத்திக்கொண்டு காலத்தை இழுத்தடிக்காமல் பேசாமல் தமிழர்களின் தலைகளை வெட்டிச் சரித்துவிட்டால் ஒரே நாளில் பிரச்சினைகளெல்லாம் தீர்ந்துவிடுமென மேர்வின் சில்வா நினைக்கக்கூடும்.மேர்வின் சில்வாவின் இந்த அச்சுறுத்தலுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காவிட்டால் ஜனாதிபதி ரணிலும் அதே நிலைப்பாட்டில் இருக்கிறார் என்றுதான் அர்த்தப்படுத்திக்கொள்ளவேண்டும்.

மேர்வின் சில்வா அரசியலில் பெரும் புள்ளியல்ல என்பதாலோ அவர் அரசியலுக்காகத்தான் அப்படிப் பேசுகிறார் என்பதற்காகவோ இதனை சாதாரண ஒரு விடயமாகக் கருதி விட்டுவிட முடியாது. தமிழர் பிரதேசங்களில் நடக்கும் அத்துமீறல்களுக்கு எதிராக பேசுவோர் அல்லது நடவடிக்கை எடுக்கத் துணிவோரின் தலைகள் துண்டிக்கப்படும் என்று பொதுவெளியில் பேசிவிட்டு சுதந்திரமாக இருப்பார் என்றால் சட்டமும் நீதித்துறையும் இந்நாட்டில் எதற்கு? அப்படியான நீதித்துறை உள்ளக விசாரணை நடத்தி இறுதிப்போர் - சாவுகள் குறித்த உண்மை நிலையை உலகுக்குச் சொல்லும் என்று எப்படி நம்பும் உலகம்?

ஜனாதிபதி ரணில் இந்த விடயத்தில் தலையிட்டு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் தமிழர்களின் தலைகளையும்,உடல்களையும் வைப்பதற்கு மேர்வின் சில்வாவுக்கு உரிய காணியொன்றை ஒதுக்கிக்கொடுக்கவேண்டும்.

## நக்கல் நமசிவாயம்

தலைமயிர் வெட்டவும் யோசனையா கிடக்குது... உவன் மேவின் சில்வா தலையை வெட்டிக்கொண்டுபோட்டா சும்மா தேவையில்லாத செலவுதானே...



# தேர்ந்து எண்ணிச் செய்வோம்!




வட்ஸ் அப் என்பது நவீன கைபேசிகளில் இருக்கக்கூடிய ஒரு செய்தி பரிமாற்றிச் செயலி ஆகும். நம் ஒவ்வொருவரின் கைபேசியிலும் நூற்றுக்கணக்கான வட்ஸ்ஆப் எண்கள் உள்ளன. நாம் காலையில் கண் விழித்தவுடன் கைபேசியை எடுத்துப் பார்க்கிறோம். நமக்கு வேண்டியவர்களுக்கு காலை வணக்கம் என்று செய்தி அனுப்புகிறோம்.

எல்லோருக்கும் ஒரே மாதிரி அனுப்ப முடியாது. கடவுள் நம்பிக்கை உள்ளவர்களுக்கு கடவுள் படம் அனுப்புவோம். அதுவும் ஒவ்வொரு கிழமைக்கும் ஏற்ற கடவுள் படத்தை அனுப்ப வேண்டும். சிலருக்கு சாதாரண படம்; கற்றறிந்த ஆன்றோர்களுக்கு ஏதாவது சிறப்பாக மேற்கோள்கள், அறிஞர்களின் பொன்மொழிகள் என அனுப்ப வேண்டும்.

உயர்பதவியில் இருப்பவர்களுக்கு கட்டளை இடுவது போன்ற, அறிவுரை சொல்வது போன்ற செய்திகளை அனுப்பக் கூடாது. நக்கல், நையாண்டி இவை கூடாது. எந்த உள்ளர்த்தமும் இல்லாமல் இருக்க வேண்டும். எனவே, கூடுதல் கவனம் தேவை. அவசரத்தில் கடவுள்களை மாற்றி அனுப்பிவிடக் கூடாது. ஏற்கனவே அனுப்பிய பொன்மொழிகளைத் தவிர்க்க வேண்டும். சிலர் தாமே சொந்தமாக யோசித்து அருமையான பொன்மொழிகளை அனுப்புகிறார்கள். இது எளிதானது அல்ல; இதற்கு எழுத்தாற்றலும் படைப்புத் திறனும் கூரிய அறிவும் தேவை.

நமக்கு வேண்டப்பட்டவர்களிடம் இருந்து வரும் வாழ்த்து நமக்குப் புத்துணர்ச்சியைத் தருகிறது. மழைச் சாரலாய் அந்த மகிழ்ச்சி நாள் முழுவதும் நம் மீது பட்டுக் கொண்டே இருக்கும். காலையில் தெளித்துக்கொண்ட நறுமணம், அந்த நாள் முழுவதும் நம்முடனேயே இருப்பதுபோல இருக்கும்.

சில வட்ஸ் அப் குழுக்கள் தொடங்கியவுடன் கலகலப்பாகப் போகும். படங்கள், நகைச்சுவைத் துணுக்குகள், முக்கிய செய்திகள் என எல்லோரும் எதையாவது பதிவிட்டுக் கொண்டே இருப்பார்கள். சில நாள்கள் கழித்து, சிலர் மௌனமாகி விடுவார்கள். சிலர் மட்டும் தொடர்ந்து அதற்கு உயிர் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். கடைசியில் ஒருநாள் அது நின்று போகும்.

சில பதிவுகள் எல்லா வட்ஸ் அப் குழுக்களிலும் வருகின்றன. ஒரு பதிவைப் பார்த்தவுடன், அதற்கு எந்த எதிர்வினையும் காட்டாமல் இருப்பது நாகரிகம் ஆகாது என்பதால் நாம் சில குறியீடுகளையாவது போட வேண்டும். மீள் பதிவு என்றாலும் 'சிறப்பு' என்று போடுவது நல்லது. ஆனால், ஒரே பதிவு சுற்றிச் சுற்றி வரும் போது சலிப்பு உண்டாகிறது.

ஒருவரின் கைபேசிக்கு அழகான படமோ இனிமையான பாடலோ வியப்பூட்டும் செய்தியோ வந்தால் அடுத்த விநாடியே அவர் அதை மற்றவர்களுக்கு அனுப்பி விடுகிறார். நாலு பேரை நல்லது சென்றடையட்டும் என்கிற நல்லெண்ணமே அதற்குக் காரணம்.

இந்த அவசர உலகில் நீண்ட பதிவை வாசிக்கவோ காணொலியைப் பார்க்கவோ பலருக்கும் நேரமும் இல்லை; பொறுமையும் இல்லை. பின்னர் நிதானமாகப் படித்துக் கொள்ளலாம் என்று ஒத்திப்போட்டால் பின்னர் படிக்க முடியாமலே போய்விடுகிறது. சில குழுக்களில் நீதிக் கதைள், சிறப்பான சம்பவங்கள், சரித்திர நிகழ்வுகள், குறள் விளக்கம் என மிகச் சிறந்த பதிவுகளும் அனுப்பப்படுகின்றன. அவை நம் அறிவுக்கு விருந்தாக அமைகின்றன.

எந்தக் குழுவாக இருந்தாலும் அரசியல், மதம் தொடர்பான கருத்துகளைப் பதிவிடக் கூடாது. இரண்டும் மிகவும் ஆபத்தானவை. அவற்றைத் தொட்டால் சர்ச்சை உருவாகும்; மனக் கசப்புகள் ஏற்படும்; விரோதம் உண்டாகும். அவரவர் கொள்கை அவரவரிடமே இருக்கட்டும். அவற்றைப் பொதுத் தளத்தில் பேச வேண்டாம்.

அண்மையில் நான் ஒரு குழுவில் இருந்து வெளியேறி விட்டேன். படித்தவர்கள் கேவலமாக சொற்போர் நடத்துகிறார்கள். தடித்த வார்த்தைகளை உபயோகிக்கிறார்கள். தனிமனிதத் தாக்குதல், கொச்சையான - அருவருப்பான வார்த்தைகள். கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால், எல்லோரும் பார்ப்பார்களே என்று தோன்றாதா?

சில வட்ஸ் அப் குழுக்கள் மிகவும் சிறப்பாக உள்ளன. நல்ல நூல்களை அறிமுகப்படுத்துகிறார்கள்; சங்க இலக்கியங்களின் நயத்தைப் பற்றி எழுதுகிறார்கள்; அதிகமாக திருக்குறளை ஆராய்கிறார்கள். இப்படிப்பட்ட குழுக்கள் அறிவை வளர்க்கும் சுரங்கங்கள்.

நாள் முழுவதும் காணொலிகளும் பாடல்களும் வந்து கொண்டே இருப்பதால் கைபேசியின் கொள்திறன் (ஸ்டோரேஜ்) நிரம்பி விடுகிறது. தேவையில்லாத புகைப்படங்களையும் காணொலிகளையும் அழிப்பது பெரிய பணியாக உள்ளது. அப்படி அழிக்கும்போது சில நேரம் தவறிப்போய் முக்கியமான பதிவுகளையும் அழித்து விடுகிறோம்.

முதியவர்களுக்கு இரவில் தூக்கம் வருவதில்லை. அவர்கள் கைபேசியை வைத்துக்கொண்டு நள்ளிரவு வரை கூட எதையாவது அனுப்பிக்கொண்டே இருக்கிறார்கள். எப்போதோ அவர்களுக்கு வந்த செய்தியை தற்போது அனுப்புகிறார்கள். நமக்கு ஒருவர் பதிவு அனுப்புகிறார் என்றால், அதைப் பார்த்துவிட்டு சும்மா இருப்பது சரியல்ல. நாமும் கைதட்டல் குறி, 'சிறப்பு', 'அருமை', 'நன்று', 'நன்றி' என்று எதையாவது போட வேண்டும்.

ஒரே பதிவு எல்லோரிடமிருந்தும் வரும். நாமும் ஒவ்வொன்றையும் பாராட்டி எதையாவது போட வேண்டும். பல சமயம் இது வெறும் சடங்காகிப் போகிறது. நண்பர்கள் குழுவில் நமக்கு முழு சுதந்திரம் உண்டு. அங்கே போலி மரியாதை தேவை இல்லை. அது ரசிக்கும்படி இருக்கிறது; சுவாரஸ்யமாக இருக்கிறது.

பெரியவர்களின் கைபேசியை குழந்தைகள் எடுத்து எதையாவது அழுத்தி விடுகிறார்கள். யாருக்காவது, எதையாவது அனுப்பி விடுகிறார்கள். அழைப்புப் பொத்தானை அமுக்கி விடுகிறார்கள். உயர்பதவியில் இருப்பவர்கள், முக்கியமான கூட்டத்தில் இருக்கும்போது நம் அழைப்பு சென்றால் மிகப்பெரிய தவறு. விஷயம் அறிந்து நாம் அவர்களிடம் மன்னிப்புக் கேட்க நேரிடுகிறது.

வட்ஸ் அப் குழுவின் செயல்பாடுகளைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு அக்குழுவின் நிர்வாகிக்கு (அட்மின்) உண்டு. 'குழுவில் அரசியல் தலைவர்கள் குறித்த தவறான செய்திகளைப் பரப்பினால் குழுவின் தலைவர் தண்டிக்கப்படுவார்' என்று அடிக்கடி எச்சரிக்கைப் பதிவு வருகிறது. ஆகவே, அத்தகைய பதிவுகளைத் தவிர்க்க வேண்டும்.

வட்ஸ் அப் செயலியின் கொள்கைகள் குறித்து எவரும் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. போலியான, தவறான செய்திகளைப் பரப்பி வருகிறார்கள். சிலர் நம் ஒப்புதலைப் பெறாமலேயே நம்மை தங்கள் குழுவில் இணைத்துக்கொள்கிறார்கள். ஒருவரை சேர்க்கும் முன் அவரிடம் அனுமதி பெற்றுத்தானே சேர்க்க வேண்டும்? ஏதேதோ குழுக்களில் நாமும் இருப்போம். ஆனா,ல் தாமரை இலை தண்ணீர் போல இருப்போம்.

தினமும் காலை வணக்கம் அனுப்பி பழக்கப்பட்டு விட்டு, ஏதோ ஒரு காரணத்தால் ஒரு நாள் அனுப்ப முடியாமல் போனால் சிலர் செய்தி அனுப்புகிறார்கள். 'இன்று ஏன் உன்னிடமிருந்து வாழ்த்து வரவில்லை? நலமா உள்ளாயா?' - என தவித்துப்போகும் உறவும், நட்பும் கிடைப்பது வரம்.

பெரும்பாலும் வாசிப்புப் பழக்கம் இல்லாதவர்களும், வேலை எதுவும் இல்லாதவர்களும் உறங்கும் நேரம் தவிர, மீதி நேரம் முழுவதையும் கைபேசியில்தான் கழிக்கிறார்கள். அவர்கள் அதற்கே அடிமையாகி விட்டார்கள் எனலாம். சராசரி மனிதன் ஒரு நாளைக்கு 150 முறை தன் கைபேசியை எடுத்து வட்ஸ் அப் பார்ப்பதாக ஓர் ஆய்வு கூறுகிறது. ஆனால், கைபேசியே கதி என்று இருப்பவர்கள் நாளொன்றுக்கு 350 முறை பார்க்கிறார்களாம். சிலருக்கு சப்தம் கேட்டவுடன், யாரிடமிருந்து செய்தி வந்துள்ளது என்று பார்த்தே தீர வேண்டும்.

உறவினர் ஒருவர் தான் இன்டர்நெட் டயட்டில் இருப்பதாகக் கூறினார். அதாவது, இணையத்தில் தான் செலவிடும் நேரத்தையும், கைபேசியில் செலவிடும் நேரத்தையும் கணிசமாகக் குறைத்துக் கொண்டதாகக் கூறினார். இரவு ஒன்பது மணிக்கு உறங்கப் போகிறார் என்றால் அப்போது கைபேசியை நிறுத்தி விடுவது அவர் வழக்கம். சிலர், கைபேசியை தலையணைக்கு அடியில் வைத்துக் கொண்டு விழிக்கும் போதெல்லாம் அதை எடுத்துப் பார்ப்பார்கள்.

வட்ஸ் அப் செயலி மிகவும் பயனுள்ள ஒன்று. வெளிநாடுகளில் வசிப்பவர்களிடம் வட்ஸ் அப் அழைப்பில் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் பேசலாம். நம் வீட்டு சுப நிகழ்வுகளுக்கான அழைப்பிதழை வட்ஸ் அப்பில் அனுப்பினால் போதும் என்ற நிலை தற்போது வந்துவிட்டது. நாட்டு நடப்புகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.வட்ஸ் அப் செயலி, தகவல் தொடர்புக்கு மிகவும் உதவுகிறது. குறிப்பாக, விளம்பரங்களின் குறுக்கீடு கிடையாது. ஆனால், எந்நேரமும் இதிலேயே மூழ்கிக் கிடக்கக் கூடாது.

வட்ஸ் அப்பில் வெறுப்பூட்டும் பேச்சுகளைத் தவிர்க்க வேண்டும். வதந்தியைப் பரப்பக் கூடாது. அரைகுறை அறிவு உள்ளவர்கள் மருத்துவக் குறிப்பைப் பகிரக் கூடாது. உடலில் சர்க்கரை அளவு குறைய குறிப்புகள், உடல் பருமன் குறைய ஆலோசனைகள் என்றெல்லாம் பதிவு வருவதை முழுமையாக நம்பக்கூடாது.

நல்ல தகவல்களை மட்டுமே பகிர வேண்டியது முக்கியம். மனதின் அழுக்கை அங்கே இட்டு நிரப்பக் கூடாது. நேரம் பொன்னானது. எனவே, வம்பு - சண்டை வரக்கூடிய விதத்தில் எதையாவது பதிவிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

வட்ஸ் அப் எனும் நல்ல செயலி குரங்கின் கையில் கிடைத்த பூமாலையாக ஆகிவிடக் கூடாது. தற்போது வட்ஸ் அப் செயலியின் நம்பகத்தன்மையை சந்தேகித்து, டெலிகிராம், சிக்னல் போன்ற செயலிகளை அதிகம் பயன்படுத்துகிறார்கள். எந்தச் செயலியாக இருந்தாலும் அதன்மூலம் நல்ல தகவல்களை மட்டுமே பதிவிட நாம் உறுதிபூணுவோம்.

**வெ. இன்சுவை**
**நன்றி - தினமணி**

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மக்களுக்கு பல இலட்சம் ரூபா பெறுமதியான உதவி









யாழ்ப்பாணம் - வடமராட்சி தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் செஞ்சோலை மாதிரி கிராமம், தேறாங்கண்டல் மக்களுக்கு 536,000 ரூபா பெறுமதியில் அத்தியவசியமான உணவுப் பொருள்கள் 12.08.2023 அன்று வழங்கிவைக்கப்பட்டுள்ளன.

செஞ்சோலையில் வளர்ந்து தற்போது கிளிநொச்சி - மலையாளபுரத்தில் உள்ள செஞ்சோலை மாதிரி கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தால் நலிவடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 24 குடும்பங்களுக்கு ரூபா 96,000 பெறுமதியான உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய், தேறாங்கண்டல் கிராமத்தில் வசிக்கின்ற பொருளாதாரத்தால் நலிவடைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட 110 குடும்பங்களுக்கு ரூபா 440,000 பெறுமதியான அத்தியவசியமான உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள், அவரது தொண்டர்கள், சமூக செயற்பாட்டாளரான இ. தயாபரன், தேறாங்கண்டல் கிராம சேவையாளர் ஆகியோருடன் நேரில் சென்று வழங்கிவைத்தார்.

இதேவேளை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த சிறப்பு நிகழ்வாக கடந்த வெள்ளிக்கிழமை இன்னிசை விருந்து இடம்பெற்றது.

இ.நிறோஜனின் வயலின், நக்கீரனின் மிருதங்க இசை, மற்றும் கேதாரநாத் ஆகிய அணிசெய் கலைஞர்களின் இசையில் மதுசிகனின் பாடல்கள் இடம்பெற்றன.

இதில் சிறப்பாக பாடல் பாடிய மதுசிகன் சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் அவர்களால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார்.

## இன்றைய நாளில்...

* 1947 – இந்தியா 190ஆண்டு கால பிரித்தானிய ஆட்சியில் இருந்து விடுதலை பெற்று பொதுநலவாயத்தில் இணைந்தது.
* 1975 – வங்காள தேசத்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியில் அரசுத்தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் மற்றும் அவரது குடும்பத்தினர் (ஷேக் ஹசீனா தவிர) அனைவரும் கொல்லப்பட்டனர்.
* 1977 – ஒகைய்யோ பல்கலைக்கழகத்தினால் இயக்கப்பட்ட பிக் இயர் என்ற வானொலி அதிர்வெண் தொலைநோக்கி ஈர்ப்பிலா வெளியில் இருந்து வானொலி சமிக்ஞை ஒன்றைப் பெற்றது. இந்நிகழ்வு "வாவ்! சமிக்ஞை" என அழைக்கப்பட்டது.
* 2005 – இந்தோனேசிய அரசுக்கும் அசே விடுதலை இயக்கத்துக்கும் இடையே 30 ஆண்டுப் போரை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு எல்சிங்கியில் அமைதி ஒப்பந்தம் எட்டப்பட்டது.
* 2013 – ஒலிங்கிட்டோ என்ற புதிய புலாலுண்ணும் மிருக இனத்தை அமெரிக்கக் கண்டத்தில் கண்டுபிடித்திருப்பதாக சிமித்சோனிய நிறுவனம் அறிவித்தது.

## முதலாவது சுரங்க உணவகம் மக்கள் பாவனைக்கு திறந்து வைப்பு!





இலங்கையில் முதன்முறையாக பூமிக்கு அடியில் 124 மீற்றர் (410 அடி) ஆழத்தில் அமைந்த போகல கிராஃபைட் சுரங்க உணவகத்தை நுகர்வோரின் பாவனைக்கு அனுமதிப்பதாக போகல கிராபைட் சுரங்கத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்தார்.

1865 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட போகல கிராபைட் சுரங்கமானது உயர்தர கிராஃபைட் ஏற்றுமதி மூலம் உலகில் உயர்ந்த நற்பெயரைப் பெற்றுள்ளது . ஜேர்மனி, ஜப்பான், இந்தியா, பாகிஸ்தான் போன்ற நாடுகளுக்கு கிராஃபைட்டை ஏற்றுமதி செய்து இந்நாட்டுக்கு அதிக அளவில் அந்நிய செலாவணியை ஈட்டித் தரும் தனித்துவமான தொழிற்சாலையாக இது காணப்படுகிறது.

போகல கிராஃபைட் சுரங்கத்தின் தற்போதைய ஆழம் 476 மீட்டர். 1,585 அடி. இங்கு 124 மீற்றர் (410 அடி) ஆழத்தில் நிலத்தடி அமைக்கப்பட்டுள்ளது. இது இலங்கையில் அமைக்கப்பட்டுள்ள முதலாவது நிலத்தடி உணவகம் என அதன் பிரதம நிறைவேற்று அதிகாரி அமில ஜயசிங்க தெரிவித்தார்.

இந்த உணவகத்தில் ஒரே நேரத்தில் பதினைந்து பேர் அமர்ந்து அங்கு செய்யப்படும் உணவு மற்றும் பானங்களை உண்ண முடியும்.மேலும், உணவகத்தைச் சுற்றி கிராஃபைட் வெட்டி எடுக்கும் தொழிலாளர்களை பார்க்க நிர்வாகம் வாய்ப்பளித்துள்ளது.

குறிப்பாக, 14 வயதுக்கு மேற்பட்டவர்கள், அதாவது, கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் பரீட்சைக்குத் தோற்றும் சிறுமிகள் கிராஃபைட் சுரங்கத்தைப் பயன்படுத்த நிர்வாகம் விசேட அனுமதி வழங்கியுள்ளது.

# சீனி வரி மோசடி வழக்கை மீளப் பெறுவது குறித்து பாராளுமன்ற குழுவில் ஆலோசனை

## சட்டமா அதிபர் திணைக்களத்தின் யோசனையை பெறவும் தீர்மானம்



நாட்டில் இடம்பெற்ற சீனி வரி மோசடியால் ஏற்பட்ட இழப்பீட்டை மீளப் பெற்றுக்கொள்வதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அரசாங்க நிதி பற்றிய குழு, நிதியமைச்சின் அதிகாரிகளிடம் கேள்வியெழுப்பியுள்ளதுடன் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்க நிதியமைச்சு தவறியமை குறித்தும் குழு தனது அதிருப்தியை வெளியிட்டுள்ளது.

அரசாங்க நிதி பற்றிய குழுவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ த சில்வா சமுகமளிக்காத நிலையில், அக்குழு பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரணவக்க தலைமையில் அண்மையில் கூடியபோதே இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடப்பட்டது.

இந்த விவகாரம் தொடர்பில் சட்டமா அதிபரின் ஆலோசனையுடன் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஏன் இன்னமும் நடவடிக்கை எடுக்கவில்லையென்றும் குழு கேள்வியெழுப்பியது. இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முன்னேற்றம் குறித்து குழுவுக்குத் தெரியப்படுத்துவதாக இங்கு சமுகமளித்திருந்த நிதி அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்ததுடன், இவ்விடயம் தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கை முன்னெடுத்துச் செல்லுமாறு சட்டமா அதிபர் திணைக்களம் ஆலோசனை வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டனர்.

சம்பந்தப்பட்ட தரப்பினர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கை மீளப்பெற்றுக்கொண்டால் நடவடிக்கை எடுக்க முடியுமா எனவும் அதிகாரிகளிடம் குழு கேள்வியெழுப்பியது. இங்கு குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் கரிசனையைக் குழுவுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறும் குழு வேண்டுகோள் விடுத்தது.

கோதுமை மா தொடர்பில் இறக்குமதி, ஏற்றுமதி கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகளை வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடுவதற்கு முன்னர் அது பற்றிக் குழுவுக்குத் தெரியப்படுத்த நிதியமைச்சு தவறியமை தொடர்பிலும் இங்கு கவலை தெரிவிக்கப்பட்டது.

மேலும், 21.07.2023ஆம் ஆண்டு அரசாங்க நிதி பற்றிய குழுவில் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட பாராளுமன்றத்தில் கடந்த 18.07.2023ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 1969ஆம் ஆண்டின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டளைச் சட்டத்தின் கீழான 2336/45 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்காக கொள்வனவு செயன்முறையை ஆரம்பித்துள்ள நிறுவனங்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரத்தை வழங்குவது வரையறுக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் இரட்டை ஏகபோகம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும் குழுவின் பதில் தலைவர் தெரிவித்தார். இது விடயத்தில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் அதன் முன்னேற்றம் குறித்தும் குழு கேட்டறிந்தது.

அத்துடன், 2023 ஒதுக்கீடு (திருத்தச்) சட்டமூலம் குறித்துக் கலந்துரையாடிய குழு இதற்கு அனுமதி வழங்கியது. இதற்கமைய உட்பிரிவு 2022ஆம் ஆண்டின் 43ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் உட்பிரிவுக்கமைய கடன்பெறும் எல்லையின் அளவு 4,979 பில்லியனிலிருந்து 13,979 பில்லியனாக அதிகரிப்பதன் மூலமும், செலவினத்தை 4,222.23 பில்லியனிலிருந்து 13,222.23 பில்லியனாக அதிகரிப்பதற்கும் திறைசேரி தொழிற்பாடுகள் திணைக்களத்தின் மூலம் 4ஆவது உபபிரிவு திருத்தப்படுகிறது.

இதில் இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், பாராளுமன்ற உறுப்பினர்களான ரவூப் ஹக்கீம், எம்.ஏ.சுமந்திரன், சந்திம வீரக்கொடி, மயந்த திசாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, மேஜர் பிரதீப் உந்துகொட, இசுறு தொடங்கொட, காவிந்த ஜயவர்தன, துமிந்த திசாநாயக, பிரேம்நாத், சி. தொலவத்த ஆகியோர் கலந்துகொண்டனர்.

## ஆசிரியர் பற்றாக்குறைக்குத் தீர்வு கோரி பெற்றோர் - ஆசிரியர் ஆர்ப்பாட்டம்





அநுராதபுரம் நிருபர்

ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்திசெய்து தருமாறு கோரி, அநுராதபுரம் வடமத்திய மாகாண கல்வித் திணைக்கள அலுவலகத்திற்கு முன்பாக கம்பிரிகஸ்வெவ அ/மனாருள் உலூம் மகா வித்தியாலய மாணவர்களும் பெற்றோர்களும் நேற்று (14) எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

அநுராதபுரம் கல்வி வலயத்திலுள்ள கம்பிரிகஸ்வெவ அ/மனாருள் உலூம் மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட நாட்களாக நிலவும் கணிதம்,விஞ்ஞானம் மற்றும் ஆங்கில பாடங்களுக்கான ஆசிரியர் பற்றாக்குறைக்கு விரைவில் தீர்வைப் பெற்றுத்தருமாறு வலியுறுதியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வடமத்திய மாகாண ஆளுநர் உள்ளிட்ட கல்வித்திணைக்கள உயரதிகாரிகளுக்கு பல முறை எழுத்து மூலம் அறிவித்தும் எந்தவித தீர்வும் கிடைக்காத பட்சத்திலேயே மாணவர்கள் - பெற்றோர்களால் மேற்படி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## முன்னாள் எம்.பி. ரஞ்சன் பட்டப்படிப்பில் சிறந்த சித்தி



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, கொழும்பு திறந்த பல்கலைக்கழகத்தில் முன்னெடுத்து வந்த இளைஞர் மேம்பாடு தொடர்பான இளங்கலை பட்டப்படிப்பின் இரண்டாமாண்டு பரீட்சையை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்க திரைப்படக் கலைஞர் என்றபோதிலும், சிறைச்சாலையில் இருந்த காலப்பகுதியிலேயே இந்தப் பரீட்சைக்கு தோற்றியிருந்தார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள ரஞ்சன், ''எனது பட்டப்படிப்பின் இராண்டாம் தர ஆண்டு பரீட்சைக்கு வெற்றிகரமாக தோற்றி சிறந்த பெறுபேறுகளையும் பெற்றுள்ளேன். அத்துடன், பட்டப்படிப்பு முடிவடைவதற்கு இன்னும் இரண்டு வருடங்கள் இருக்கின்றன''- என்று குறிப்பிட்டுள்ளார். இதேவேளை, இவர் கடந்த 2019 ஆம் ஆண்டே உயர் தரப் பரீட்சைக்குத்தோற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலியல் குற்றச்சாட்டில் பாராளுமன்ற அதிகாரியொருவர் இடைநிறுத்தம்

பாராளுமன்ற பாதுகாப்புத் திணைக்களத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் பலரால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளான சம்பவம் தொடர்பில் 10இற்கும் மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக பாராளுமன்ற செயலாளர் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய திணைக்களத்தின் உதவி முகாமையாளர், பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும், சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

முதற்கட்ட விசாரணை கடந்த திங்கட்கிழமை நடத்தப்பட்டது, கடந்த வெள்ளிக்கிழமை உதவி மேலாளர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டார். முதற்கட்ட விசாரணையைத் தொடர்ந்து மற்றொரு விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து உணவகத் துறையிலிருந்து வீட்டு பராமரிப்புத் துறையை பிரித்து நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவது குறித்து தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

இவ்விரு திணைக்களங்களும் இணைந்து செயற்படும் முறைமையினால் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதற்கு பாதகமான நிலை ஏற்பட்டுள்ளதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## செஞ்சோலை படுகொலையின் நினைவேந்தல்

செஞ்சோலை படுகொலையின் 17ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று முன்தினம் (13) நடைபெற்றன.

யாழ்ப்பாணம் - வல்வெட்டித்துறையில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது எம்.கே. சிவாஜிலிங்கம் உயிரிழந்த மாணவிகளுக்கு சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

கடந்த 2006ஆம் ஆண்டு ஓகஸ்ட் 14ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் வள்ளிபுனம் கிராமத்தில் அமைந்திருந்த செஞ்சோலை சிறுவர் இல்லத்தின் மீது வான்படையினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 63 பாடசாலை மாணவிகள் படுகொலை செய்யப்பட்டனர்.




ஸ்ரீ லංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று விதம் (14.08.2023)

| நாணயம் | கொள்வனவு விதம் | விற்பனை விதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 201.3929 | 213.1683 |
| கனேடியன் டொலர் | 231.6659 | 244.4224 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 42.4525 | 45.6005 |
| யூரோ | 341.8135 | 359.1276 |
| ஜப்பான் யென் | 2.1558 | 2.2664 |
| சிங்கப்பூர் டொலர் | 230.2341 | 242.7268 |
| ஸ்ரேலிங் பவுன் | 396.4311 | 415.5868 |
| சுவிஸ் பிராங்க் | 354.6884 | 375.6161 |
| ஐ.அ. டொலர் | 313.9936 | 326.8853 |

| நாடு | நாணயம் | விற்பனை விதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 848.7803 |
| குவைட் | குவைட் தினார் | 1,040.2526 |
| ஓமான் | ஓமான் றியால் | 831.1753 |
| கட்டார் | கட்டார் றியால் | 87.7841 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 85.2852 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 87.1196 |





யாழ். புங்குடுதீவு கண்ணகிபுரம் ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஆலய மண்டலாபிஷேக பூர்த்தி விழாவை வட்டுக்கோட்டை சிவாகம வித்யாஜோதி சிவஸ்ரீ ச.மதுசூதன சிவாச்சாரியார் பூர்வாங்க கிரியைகளை நிகழ்த்துவதையும் மற்றும் கோபால் சிவாச்சாரியார், தர்சக சர்மா, கொழும்பு சிவநேச சிவாச்சாரியார், சிவஸ்ரீ கலாநிதி இராமச்சந்திர குருக்கள், பாபு சர்மா, லகுதர சர்மா, கோண்டாவில் ஹரிசுதன் குருக்கள் ஆகியோர் கிரியைகளில் பங்குபற்றியிருப்பதையும் அறங்காவலர் சபையின் ஆலோசகர் தொழிலதிபர் கனக ரகுநாதன் அன்றையதின பூஜைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தமையையும் அம்பாள் வீதி உலா வருவதையும் படத்தில் காணலாம்.

தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிற்றுக்கிழமை 2023.08.13
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5205
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 20,000,000.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 3 3 6 3 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3447
சீட்டிழுப்பு திகதி 2023.08.13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு Rs. 72,622,928.00
ஆங்கில எழுத்து U
வெற்றி இலக்கங்கள் 05 12 36 72
விசேட எழுத்து U
இலவசாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 78367

Lucky 7
திகதி 13.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0031
வெற்றி இலக்கினம் சிம்மம்
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கங்கள் 3 7 6 7 4 1
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,892,262.56

தன நிதானய
தேதி 2023/08/13
சீட்டிழுப்பு இலக்கம் 1235
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 104,862,740.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 27 28 31 33
விஷேட ஆங்கில எழுத்து L
Double Chance இலக்கம் 22325

ராசி சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் 514
சீட்டிழுப்பு திகதி 2023-08-13
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,502,258.00
வெற்றி இலக்கினம் மேஷம்
வெற்றி இலக்கங்கள் 01 06 23 34
விசேட இலக்கினம் மேஷம்

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1553
13/08/2023
61415
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 404,013,540.00
ஆங்கில எழுத்து H
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 31 44 62 69
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00






இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 2023 ஜூலை 21ஆம் திகதி ராஷ்திரபதி பவனில் குடியரசுத் தலைவர் ஸ்ரீமதி திரௌபதி முர்மு அவர்களைச் சந்தித்தார்.



பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2023 ஜூலை 21 ஆம் திகதி புதுடில்லியில் இலங்கை ஜனாதிபதி அதிமேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்களைச் சந்தித்தார்.

> “நமது நாகரீகங்களைப்போலவே எமது உறவுகளும் புராதன மானவையும் நீட்சிமிக்கவையும். இந்தியாவின் அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாகர் கொள்கைகளில் இலங்கை மிக முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது”
>
> **– பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி**
> **( இலங்கை ஜனாதிபதி அவர்களின் இந்திய விஜயத்தின்போது)**

> “இன்று நாம், நமது இருதரப்பு இராஜதந்திர உறவின் 75ஆவது ஆண்டை எட்டியிருக்கும் நிலையில் நமது கொள்கையானது, எதிர்வரும் தசாப்தங்களில் நமது எதிர்கால தலைமுறையினருக்கான சிறந்த வாய்ப்புகள் மற்றும் நிலையான நலன்களைப் பெற்றுக்கொள்வதற்காக பரஸ்பரம் நன்மை பயக்கும் சந்திப்புகள் ஊடாக மிகவும் பாதுகாப்பான எதிர்காலம் ஒன்றை நோக்கி எம்மை உந்துவதாக அமையும்.”
>
> **– ஜனாதிபதி அதிமேதகு ரணில் விக்கிரமசிங்க**
> **(இந்திய விஜயத்தின்போது)**

# உயர் ஸ்தானிகரின் செய்தி



வணக்கம், ஆயுபோவன், நமஸ்கார் !

இந்தியாவின் 77 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இலங்கையிலுள்ள சகல இந்தியர்களுக்கும், இலங்கையைச் சேர்ந்த எனது சகோதர சகோதரிகளுக்கும் மனப்பூர்வமான நல்வாழ்த்துகள்.

ஆசாதி கா அம்ரித் மஹோத்சவ் இவ்வருடம் முழுமைபெறும் நிலையில், தொழில்நுட்பம் சார்ந்ததும் அறிவை அடிப்படையாகக் கொண்டு அனைவருக்கும் செழுமையைத் தரக்கூடியதுமான பொருளாதாரத்துடனான பரிணாம வளர்ச்சியைக் கொண்ட அடுத்த 25 ஆண்டுகளைக் குறிக்கும் “அம்ரித் கால்” எனப்படும் காலப்பகுதியை ஆரம்பிக்க இந்தியா தயார் நிலையில் உள்ளது.

தேவைப்படும் சகல சந்தர்ப்பங்களிலும் நாம் தொடர்ந்தும் இலங்கை மக்களுடன் இணைந்திருக்கும் நிலையில், அயலுறவுக்கு முதலிடம் மற்றும் சாஹர் (பிராந்தியத்தில் அனைவருக்கும் வளர்ச்சியும் பாதுகாப்பும்) ஆகிய எமது கொள்கைகள் அனைவருக்கும் செழுமையை உறுதிப்படுத்துவதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை பிரதிபலிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

அத்துடன், தற்போதைய சூழலில் சவால்களைக் கடந்து வளர்ச்சியை நோக்கிய புதிய பயணத்துக்காக இலங்கை தயார்நிலையில் இருக்கும் இச்சந்தர்ப்பத்தில் இந்திய – இலங்கை நட்புறவும் புதிய மைல்கல்லை நோக்கிச்செல்கின்றது. இவ்வருடத்தில் 75 ஆண்டுகால இராஜதந்திர உறவை நாம் நிறைவுசெய்யும் அதேவேளை, அடுத்து வரும் 25 ஆண்டுகளில் மிகவும் நெருக்கமானதொரு பொருளாதார பங்குடைமைக்காக திட்டமிடுகின்றோம்.

“தொடர்புகளை மேம்படுத்தல், செழுமையை உறுதிப்படுத்தல்” என்ற தலைப்பில் நம் இரு தலைவர்களும் வெளியிட்டுள்ள கொள்கை அறிக்கையானது சகல பரிமாணங்களிலும் தொடர்பை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்ட நீண்டகாலத்துக்குரிய வழிகாட்டியாகும்.

2023 ஜூலையில் ஜனாதிபதி அதி மேதகு ரணில் விக்கிரமசிங்க அவர்கள் மேற்கொண்டிருந்த விஜயத்தின்போது இரு நாடுகளினதும் மக்களை மேலும் பிணைக்கும் துறைகளான சக்தி, பால்வளம், அதிகரித்த வான் & கடல் மார்க்கமான தொடர்புகள், UPI தொடர்புகள், மற்றும் ஏனைய பல்வேறு துறைகள் சார்ந்து விடுக்கப்பட்ட அறிவிப்புகளும் அந்த விஜயத்தின் மூலமான பெறுபேறுகளும் இந்த இலக்கிற்கு மேலும் உத்வேகமளித்துள்ளன.

நண்பர்களே, எதிர்காலம் தொழில்நுட்பத்தை மையமாகக் கொண்டதாகவே அமைந்திருக்கும். இலங்கை DigiEcon 2030 என்ற பயணத்தை ஆரம்பிக்கும் நிலையில், எமது டிஜிட்டல் பொது உட்கட்டமைப்பினால் வழிநடத்தப்பட்ட ஆக்கபூர்வமான வளர்ச்சியின் மூலமான இந்திய அனுபவத்தை பகிர்ந்து கொள்வதற்காக நாம் மிகவும் நெருக்கமாக பணியாற்றி வருகின்றோம்.

இந்தியாவை பூர்வீகமாகக் கொண்ட தமிழர்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளமை இவ்வாண்டில் கொண்டாடப்படும் நிலையில், இவ்வருடமும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இச்சமூகத்தின் ஒட்டுமொத்த நலனுக்காக இந்திய அரசாங்கம் 3 பில்லியன் இலங்கை ரூபா விசேட நன்கொடையை அறிவித்துள்ளது. இதேபோன்ற ஒரு தொகுதி உதவி கிழக்கு மாகாண மக்களுக்காகவும் வழங்கப்பட்டுள்ளது.

நமது மக்களிடையிலான பொதுவான மரபுகள், பிணைப்புகள் மற்றும் நாகரிக தொடர்புகள் ஆகியவற்றின் அடித்தளங்களை மேலும் கட்டியெழுப்புவதன் மூலம் மக்களின் முன்னேற்றம் மற்றும் செழுமைக்கான கூட்டு இலக்குடன் நாம் இந்திய இலங்கை உறவின் அடுத்த கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளோம். அத்துடன், எதிர்வரும் “அம்ரித் கால்” காலப்பகுதியில் இந்திய - இலங்கை பங்குடைமையானது ஆழமாகவும் பரந்தளவிலும் சம அளவில் வளர்ச்சிபெற தயார் நிலையிலுள்ளதென நான் உறுதியாக நம்புகின்றேன்!

**- கோபால் பாக்லே**





# 77 ஆவது இந்திய சுதந்திர தினம்



“தொடர்புகளை மேம்படுத்தல், செழுமையை உறுதிப்படுத்தல்”

## இந்திய – இலங்கை பொருளாதார பங்குடைமை நோக்கு

### முக்கியத்துவமிக்க பகுதிகள்

### கடல் மார்க்கமான தொடர்பு

- கொழும்பு, திருகோணமலை மற்றும் காங்கேசன்துறையில் துறைமுக மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள்
- பயணிகள் கப்பல் சேவை

### வான் மார்க்கமான தொடர்பு

- யாழ்ப்பாணம், திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய நகரங்களுடன் விமானத் தொடர்புகள்
- இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறை உட்கட்டமைப்பில் முதலீடு

### சக்தி மற்றும் எரிசக்தி தொடர்பு

- உயர் வலு மின்சக்தி இணைப்புக்கான வலையமைப்பு
- கைத்தொழில், சக்தி மற்றும் பொருளாதார செயற்பாடுகளுக்கான தேசிய மற்றும் பிராந்திய மையமாக திருகோணமலை
- தென் இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பல்பொருள் பெற்றோலிய குழாய் இணைப்பு
- சூரியக்கல, காற்று, பசுமை ஹைட்ரஜன், பசுமை அமோனியா திட்டங்களில் ஒத்துழைப்பு

### வர்த்தக, பொருளாதார மற்றும் நிதி ரீதியான தொடர்புகள்

- UPI அடிப்படையிலான டிஜிட்டல் கொடுப்பனவுகள்
- இலங்கையில் இந்திய முதலீட்டிற்கான வசதிகளை உருவாக்குதல்
- பரந்த வர்த்தக உடன்படிகைகள் குறித்த விவாதங்கள்
- டிஜிட்டல் பொருளாதாரம்

### இரு நாட்டு மக்களிடையிலான தொடர்பு

- உயர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் திறன் விருத்தி
- நிலத் தொடர்புக்கான வாய்ப்பு
- இந்தியாவின் பௌத்த வளாகங்கள் மற்றும் இலங்கையின் இராமாயண யாத்திரை ஆகியவற்றுடனான இணைப்பு



2022 ஜனவரி 20ஆம் திகதி வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள் பிரதமர் தினேஷ் குணவர்தன அவர்களைச் சந்தித்தார்.



2022 ஜனவரி 19ஆம் திகதி வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்ஷங்கர் அவர்கள் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அவர்களைச் சந்தித்தார்.



சென்னை – யாழ்ப்பாணம் இடையேயான 100 ஆவது விமான சேவை 07 ஜூன் 2023 அன்று யாழ்ப்பாணத்தை வந்தடைந்தது.



இந்தியாவின் முதல் சர்வதேச கப்பல் சென்னையிலிருந்து 05 ஜூன் 2023 அன்று இலங்கைக்கு வருகைதந்தது.



இந்திய பெற்றோலிய மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை 26 மார்ச் 2023 அன்று சந்தித்தார்.




கொழும்பில் 24 மார்ச் 2023 அன்று எரிசக்தி கலந்துரையாடல் இடம்பெற்றது.

**உங்களுக்கு தெரியுமா?**

2022 ஓகஸ்ட் மாதம் முதல் இந்திய ரூபா, உத்தியோகபூர்வ வெளிநாட்டு நாணயமாற்றாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்டது.



இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பொருளாதார பரிவர்த்தனைகளின் வர்த்தக தீர்வுகளுக்கு இந்திய ரூபாவை பயன்படுத்துவது தொடர்பிலான கலந்துரையாடல் 02 மார்ச் 2023 அன்று இடம்பெற்றது.




இலங்கையில் வலையமைப்பிலிருந்து வலையமைப்புக்கு ஒப்பந்தமானது NIPL மற்றும் Lanka Pay இன் UPI விண்ணப்பத்தின் ஊடாக முன்னெடுப்பதற்கு அண்மைய விஜயத்தின்போது கைச்சாத்திடப்பட்டது.

## ஒரு நம்பகமான பங்குதாரர்



100 மில்லியன் டொலர் பாதுகாப்பு கடன் வசதியளிப்பு திட்டத்தின் கீழ் இலங்கை பொலிஸ் திணைக்களத்துக்கு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட 500 Mahindra SUV வாகனங்கள் கையளிக்கப்பட்டன.



இலங்கையின் பொதுப் போக்குவரத்து உட்கட்டமைப்பை வலுப்படுத்தும் நோக்கில் 15 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியில் 500 பஸ்கள் வழங்கப்பட்டன.



வடக்கு புகையிரத சேவையின் அநுராதபுரம் முதல் ஓமந்தை வரையிலான ரயில் பாதை இந்திய ரயில்வே கன்ஸ்ட்ரக்ஷன் இன்டர்நெஷனல் லிமிட்டெட் (IRCON) நிறுவனத்தினால் 91.27 மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் புனரமைக்கப்பட்டு மீளத் திறக்கப்பட்டது.



தம்புள்ளை போன்ற பல்வேறு ஒருங்கிணைந்த நீர்த்திட்டங்கள் நிறைவுசெய்யப்பட்டதைப்போல பொல்கஹவெல, அளுத்கம ஆகிய பகுதிகளில் இதேபோன்ற திட்டங்கள் 315 மில்லியன் டொலருக்கும் மேற்பட்ட நிதிச் செலவில் முன்னெடுக்கப்படுகின்றன.

## 2022 ஆம் ஆண்டில் இந்தியாவின் 4 பில். டொலர் பன்முக ஆதரவு

- **700 மில்லியன் அமெ.டொலர்** பெற்றோலிய பொருட்களுக்கான உதவி
- **800 மில்லியன் அமெ.டொலர்** அத்தியாவசிய பொருட்களுக்கு சலுகைக் கடன்
- **55 மில்லியன் அமெ.டொலர்** உரத்துக்கான கடன் வசதியளிப்பு
- **2 பில்லியன் அமெ.டொலர்** க்கு உட்பட்ட ACU பொறுப்புகளுக்கான செலுத்துகை
- **400 மில்லியன் அமெ.டொலர்** CBSL மற்றும் RBI ஆகியவற்றுக்கிடையில் ஜனவரி 2022 இல் நாணயப்பரிமாற்றம்

# கல்வியங்காட்டு மர்மக் கொலை

## 09 வயது சிறுமியுடன் தவறாக நடக்க முற்பட்டவரென விசாரணையில் தெரிவிப்பு

யாழ். நிருபர்



யாழ்ப்பாணம் கல்வியங்காட்டுப் பகுதியில் நிர்வாணமாக சடலமாக மீட்கப்பட்ட நபர், 09 வயதான பாடசாலை மாணவியை பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளதாகவும் , அதனால் மாணவியின் தாய் உள்ளிட்ட உறவினர்கள் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கல்வியங்காடு விளையாட்டரங்க வீதியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை மகேந்திரன் (வயது 54) என்பவர் கடந்த சனிக்கிழமை அவரது வீட்டிலிருந்து நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தவேளை,

கொலையான நபர் முச்சக்கரவண்டியில் 09 வயதான பாடசாலை மாணவியை பாடசாலைக்கு ஏற்றி இறக்கி வந்துள்ளார். இந்நிலையில், மாணவியுடன் தவறான நடத்தையில் ஈடுபட முயற்சித்தவேளை, மாணவி அது குறித்து தனது தாயாருக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

தாயார் அது குறித்து வட்டுக்கோட்டை, சித்தங்கேணி பகுதியில் வசிக்கும் தனது சகோதரனுக்கு தெரியப்படுத்தியுள்ளார். அவர் கோப்பாய் வந்து தனது மருமகளுடன் தவறாக நடந்துகொள்ள முற்பட்ட முச்சக்கரவண்டி சாரதியை சித்தங்கேணிக்கு அழைத்துச் சென்று கடுமையான விசாரணைக்கு உட்படுத்தி தாக்கியுள்ளார்.

பின்னர் அவரை கோப்பாய் வீட்டுக்குக் கொண்டுசென்று தாக்கியுள்ளரென ஆரம்பகட்ட விசாரணைகளின் அடிப்படையில் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளது.

அதனைத் தொடர்ந்து சிறுமியின் தாய் மற்றும் பெரியதாய் உள்ளிட்ட இரு பெண்களையும் நான்கு ஆண்களையும் கோப்பாய் பொலிஸார் கைதுசெய்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

அதேவேளை, பாதிக்கப்பட்ட 09 வயது சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்த நடவடிக்கை எடுத்துள்ள பொலிஸார், கொலையானவரின் மரணத்திற்கு காரணம் உடற்கூற்றுப் பரிசோதனை அறிக்கையின் மூலமே தெரிந்துகொள்ள முடியும் என தெரிவித்தனர்.





அருள்மிகு மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய காம்யோற்சவ பெருவிழா நிகழ்வில் நேற்று முன்தினம் இரவு சுவாமி சப்புறத்தில் எழுந்தருளி வருவதனையும் "முக உத்தர" திருத்தேர் 21ஆம் நூற்றாண்டின் ஈழவளநாட்டின் மிகப்பெரும் இரதமாக 45அடி உயரத்தில் அமையப்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

படம்: நடராஜன் ஹரன்

# யாழில் குளவிக்கொட்டுக்கு இலக்கான வயோதிபப் பெண்மணி உயிரிழப்பு

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவர் குளவிக்கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் கடந்த சனிக்கிழமை காலை 6.30. மணிக்கு காரைநகர், களபூமியிலுள்ள ஆலயத்துக்கு துப்புரவு வேலைக்காக சென்று, துப்புரவுப் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்நிலையில் அவர் வலந்தலை வைத்திய சாலைக்கு அழைத்துச்செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று முன்தினம் (13) அதிகாலை வேளையில் சிகிச்சை பலனின்றி காரைநகர், களபூமியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் (வயது 63) என்ற பெண்மணியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார்.



முல்லைத்தீவு - வள்ளிபுனம் செஞ்சோலை வளாகத்தில், கடந்த 2006.08.14அன்று இலங்கை விமானப்படையினரால் மேற்கொள்ளப்பட்ட விமானக்குண்டுவீச்சுத் தாக்குதலில் படுகொலைசெய்யப்பட்ட 53 மாணவியர்களுக்கும், நான்கு பணியாளர்களுக்கும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், படுகொலை இடம்பெற்ற செஞ்சோலை வளாகத்தில் சுடரேற்றி மலர்தூவி அஞ்சலிசெலுத்தினார்.

இந்த அஞ்சலி நிகழ்வில் சமூக ஆர்வலர் அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன் உள்ளிட்ட சமூக செயற்பாட்டாளர்கள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

படம்: முல்லைத்தீவு நிருபர்

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# சுஜி பௌத்த சங்கத்தினரால் மூக்குக்கண்ணாடி வழங்கல்

கிளிநொச்சி நிருபர்

முல்லைத்தீவு புதுகுடியிருப்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட உடையார் பகுதியில் வாழ்கின்ற பொதுமக்களுக்கு கிளிநொச்சி, முல்லைத்தீவின் படை முகாம்களின் தளபதியின் ஏற்பாட்டில் 68ஆவது படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் தாய்லாந்து சுஜி பௌத்த சங்கத்தினரால் கண் பரிசோதனையும், மூக்குக்கண்ணாடி வழங்கலும் நேற்று முன்தினம் இடம்பெற்றன.

இதன்போது குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபர்கள், மாணவர்கள் என பலர் கலந்துகொண்டதோடு, அவர்கள் தங்களது கண்களை பரிசோதனை செய்து அதற்குரிய மூக்குக்கண்ணாடிகளையும் பெற்றுக்கொண்டனர்.









# மட்டுவில் கிழக்கில் தபாலக ஊழியர் சடலமாக மீட்பு

சாவகச்சேரி நிருபர்

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் கிழக்குப் பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து நேற்று முன்தினம் (13) பிற்பகல் தூக்கிட்ட நிலையில் ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் மின் வயரில் தூக்கிட்டு வயர் அறுந்து கீழே விழுந்த நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டவர் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 42 வயதான தபால் நிலைய ஊழியர் எனத் தெரிய வந்துள்ளது.

மேற்படி மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# மலையகத்தில் அளவுக்கதிகமான மதுசாலைகள் இருக்கும்போது பசறையிலும் கடைகள் தேவையா?

## மலையக சமூகம் செய்வதறியாது திண்டாட்டம் – கேள்வி

ராமு தனராஜா

மலையகத்தில் ஏற்கனவே மூலைமுடுக்கெல்லாம் அளவுக்கதிகமான மதுசாலைகள் திறந்திருக்கும் நிலையில், இது போதாதென்று பதுளை, பசறை 10ஆம் கட்டையிலும் புதிய மதுவகம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு ஆயத்தப் பணிகள் நடக்கின்றதாக மக்கள் சினம் கொள்வதாகவும் – செய்வதறியாது திண்டாடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

மலையகம் 200 இல் ஏதாவது நல்லது நடக்காதா என்று மக்கள் எதிர்பார்த்துக் காத்திருக்கும் இந்த நேரத்தில், மேலும் புதிதாக சாராயக் கடைகள் திறப்பதற்கான தேவைகள்தான் என்ன? இதனால் பெரும் புள்ளிகளுக்குத்தான் இலாபமேயன்றி எமக்கில்லை.

பதுளை, பசறை பத்தாம் கட்டையில் திறக்கப்படவிருக்கும் மதுவகத்தை அண்மித்த பகுதியில் பிரதான பாடசாலை அமைந்துள்ளது. பாடசாலை மாணவர்கள் இந்த வழியாகத்தான் பாடசாலைக்குச் செல்ல வேண்டும்.

அதிகாரத்தில் இருக்கும் அரசியல்வாதிகளே உண்மையில் உங்கள் கண்களுக்கு இவை தெரியவில்லையா? மலையகப் பகுதிகளில் மேலும் மேலும் புதிதாக மதுசாலைகள் திறக்கப்படுவதை தடுத்து நிறுத்தாமல் வேடிக்கை பார்க்கவா மக்கள் உங்களுக்கு வாக்களித்தார்கள்?

மக்களின் பொருளாதார மற்றும் கலாசார வாழ்வியலை சீரழிக்கும் நிகழ்வுகளை பார்த்துக் கொண்டு சும்மா இருப்பது எதற்காக? சிறுவர்கள், சிறுமியர், பெண்கள், இளைஞர்கள் என பலதரப்பட்ட மக்களையும் பாதிக்கவல்ல இந்தப் புதிய சாரயக்கடை திறப்புக்கு நீங்கள் எதிர்ப்பு தெரிவிக்காது மௌனம் காப்பது ஏனோ..?

இந்த மதுவகம் திறப்புக்கு எதிராக பிரதேச மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள். அதில் பதுளை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் பங்கேற்றார். இனிவரும் நாட்களில் பாரிய எதிர்ப்புப் போராட்டங்கள் நிச்சயம் தொடரும் என்று பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

மலையக மக்களின் அமைதியான வாழ்வுக்கு குந்தகம் விளைவிக்கும் இந்த மதுவகத்தையும் திறக்கவிடாது தடுக்க வேண்டும் என்று உரிய அரச அதிகாரிகளிடமும் அதிகாரத்தில் இருக்கும் அரசியல் பிரமுகர்களிடமும் பெரும் எதிர்பார்ப்போடு பிரதேச மக்கள் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றனர்.

# பாடசாலைக்குள் நுழைந்து பொருட்கள் திருடிய இராணுவச் சிப்பாய் கைது

ஹல்துமுல்ல, சொரகுனே பிரதேசத்திலுள்ள பாடசாலை ஒன்றிற்குள் புகுந்து ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடிய குற்றச்சாட்டில் இராணுவச் சிப்பாய் ஒருவர் நேற்று (14) கைதுசெய்யப்பட்டதாக ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர் பாடசாலையின் பழைய மாணவர் எனவும் புனானி இராணுவ முகாமில் பணிபுரியும் பொறியியலாளர் படைப்பிரிவின் சிப்பாய் எனவும் அந்தக் கல்லூரியின் பிரதான மாணவத் தலைவராகப் பணியாற்றுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாடசாலையின் சங்கீத அறையை இரவு வேளையில் உள்நுழைந்து உடைத்து மல்டிமீடியா இயந்திரம், புளூடுத் உபகரணங்கள் மற்றும் சீடி பிளேயர் என்பனவற்றைத் திருடியுள்ளார் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைக்கமைய தெரியவந்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் திருடப்பட்ட மல்டிமீடியா இயந்திரத்தை 25,000 ரூபாவுகங்கு தியத்தலாவ பிரதேசத்தில் விற்று சந்தேக நபர் பணம் பெற்றுக்கொண்டுள்ளதாகவும் இதனையடுத்தே இந்த இராணுவச் சிப்பாய் கைதுசெய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை, சீடி ப்ளேயரை நண்பருக்கு வழங்கியதாகவும் புளூடுத் ஸ்பீக்கர் என்பன சந்தேக நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பொலிஸ் பிரிவுக்குப் பொறுப் பான பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் கலுபானவின் ஆலோசனையின்பேரில் ஹல்துமுல்ல பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் அசங்க சுரவீர உள்ளிட்ட குழுவினர் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கடும் வறட்சி நிலவுவதால் மின்துண்டிப்புக்கு சாத்தியம்

## பொறியியலாளர்கள் எச்சரிக்கை

மத்திய மலைநாட்டில் மற்றும் நாட்டில் நிலவும் கடுமையான வறட்சியான காலநிலையால் காசல்ரீ மற்றும் மவுசாகலை நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் வேகமாக வீழ்ச்சியடைந்து வருவதாக நீர்த்தேக்கங்களுக்குப் பொறுப்பான லக்சபான கென்யோன் நீர் மின் நிலைய பொறியியலாளர்கள் தெரிவித்தனர். இதன் காரணமாக மின்துண்டிப்பை முன்னெடுக்க வேண்டி ஏற்படலாம் எனவும் அவர்கள் எச்சரித்துள்ளனர்.

மவுசாக்கலை நீர்த்தேக்கத்தின் 120 அடியாக இருந்த நீர் மட்டம் 48 அடிகளாலும், காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 155 அடியிலிருந்து 33 அடிகளாலும் குறைந்துள்ளதாகவும் பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

இவ்விரண்டு நீர்த்தேக்கங்களில் இருந்துதான் கெனியோன், விமலசுரேந்திர, லக்ஷபான, புதிய லக்ஷபான, பொல்பிட்டிய சமனல கலுகல ஆகிய நீர்த்தேக்கங்களுக்கு சுரங்கம் வழியாக நீர் விநியோகம் இடம்பெறுவதுடன், மின்சார உற்பத்திகளும் இடம்பெற்று வருகின்றன.

வறட்சியான காலநிலை தொடர்ந்தால் இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் அளவு குறையுமென பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டுவதுடன், காசல்ரீ மற்றும் மவுச்சாக்கலை நீர்த்தேக்கங்களில் இருந்தான நீர் விநியோகமும் பாதிக்கப்படும்.

மின்சார உற்பத்திக்கு தடை ஏற்படும் பட்சத்தில் எதிர்காலத்தில் மின்சாரத் துண்டிப்பும் இடம்பெற வாய்ப்புகள் உள்ளதாக பொறியியலாளர்கள் கூறுகின்றனர்.

இதேவேளை, உடவளவ நீர்த்தேக்கத்தில் இருந்து சமனலவேவ நீர்த்தேக்கத்துக்கு நீர் விடுவிக்கப்பட வேண்டும். இலங்கை விவசாய சம்மேளனம் தொடர்ச்சியான போராட்டங்களை முன்னெடுத்து வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# நீரில் மூழ்கி இளைஞன் உயிரிழப்பு

ஊவா பரணகம, ரத்தம்ப தியகொலார ஆற்றில் நீராடச் சென்ற இளைஞன் ஒருவர் நேற்றுமுன்தினம் (13) மாலை சடுதியாக நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக அம்பகஸ்தோவ பொலிஸார் தெரிவித்தனர்.

நுவரெலியா, கந்தபொல பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் (13) தனது உறவினருடன் ஆற்றுக்கு நீராடச் சென்ற நிலையில், நீரில் மூழ்கியதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாரும் பிரதேசவாசிகளும் இணைந்து இளைஞனைத் தேடும் நடவடிக்கைகளை மேற்கொண்டபோது அவர் மீட்கப்பட்டு வைத்தியசாலைக்கு கொண்டுசென்றபோது ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்த இளைஞனின் சடலம் தற்போது ஊவா - பரணகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், பண்டாரவளை பிரிவுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் பணிப்புரையின்பேரில் அம்பகஸ்தோவ பொலிஸ் நிலையக் கட்டளைத் தளபதி பொலிஸ் பரிசோதகர் தலைமையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணவத் தலைவர் - தலைவிகளுக்கு சின்னம் அணிவிக்கும் நிகழ்வு





ஆ.ரமேஸ்

நுவரெலியா ஸாஹிரா முஸ்லிம் வித்தியாலயத்தின் 2023ஆம் ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்ட மாணவத் தலைவர் மற்றும் தலைவிகளுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு வித்தியாலய கேட்போர் கூடத்தில் நேற்று (14) காலை இடம்பெற்றது.

வித்தியாலய அதிபர் ஜே.நிஷாம் டீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சமன் ஜயசுந்தர, நுவரெலியா உதவி வலயக் கல்விப் பணிப்பாளர் அனோஜா ரத்நாயக்க, ஆசிரிய ஆலோசகர் கணேஷ்ராஜ் ஆகியோர் கலந்துகொண்டு மாணவத் தலைவர், தலைவிகளுக்கான சின்னத்தை அணிவித்து சான்றிதழ்களையும் வழங்கினர். மேலும் இந்நிகழ்வில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கடத்தப்பட்ட வியாபாரி பலாங்கொடையில் மீட்பு

ஏ.ஏ.எம்.பாயிஸ்

50 இலட்சம் ரூபா கடன் பெற்று அதனைத் திருப்பி வழங்காததால் பணம் கொடுத்தவர் கடன் பெற்றவரை கடத்திச் சென்ற சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது. இது தொடர்பாக நிட்டம்புவ பொலிஸ் நிலையத்தில் கடத்திச்செல்லப்பட்டவரின் சகோதரியால் முறைப்பாடு செய்யப்பட்டது. இதனையடுத்து புலன்விசாரணைப் பிரிவுப் பொலிஸார் கடத்திச் செல்லப்பட்ட வியாபாரியை பலாங்கொடையில் மீட்டுள்ளனர்.

2018 ஆம் ஆண்டு மேற்குறித்த பிரதேசத்தைச் சேர்ந்த வியாபாரி இன்னொரு வியாபாரிக்கு 50 இலட்சம் ரூபா கடன் வழங்கியுள்ளார். கடனைத் திருப்பி வழங்காது ஏமாற்றி வந்ததால் கடன் கொடுத்தவர் கடன் பெற்றவரின் சகோதரிக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்தி உங்கள் சகோதரர் பணத்தைத் தராததால் அவரைக் கடத்திச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட புலனாய்வு நடவடிக்கைகளையடுத்து கடன் பெற்றவர் பலாங்கொடை பிரதேசத்தில் வைத்து நேற்று மீட்கப்பட்டார். இவரைக் கடத்திச் சென்ற வியாபாரியை தேடும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இந்திய சுதந்திர தினம் இன்று

**10ஆவது முறையாகவும்**

**செங்கோட்டையில்**

**தேசிய கொடியேற்றும்**

**பிரதமர் மோடி**



உலக செய்திகள்

இந்தியாவின் 77ஆவது சுதந்திர தினம் இன்று கோலாகலமாகக் கொண்டாடப்படவுள்ளது. சுதந்திர தினத்தையொட்டி டில்லி செங்கோட்டையில் பிரதமர் நரேந்திர மோடி இன்று தேசியக் கொடியேற்றி, நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார்.

சுதந்திர தின விழா நடைபெறவுள்ள டில்லி செங்கோட்டையில் வரலாறு காணாத பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடந்த ஜூலை 26 முதல் செங்கோட்டை வளாகம், எஸ்பிஜி பாதுகாப்புப் படையின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டுள்ளது. அங்கு 10,000இற்கும் மேற்பட்ட பாதுகாப்புப் படை வீரர்கள் குவிக்கப்பட்டுள்ளனர். முக்கிய இடங்களில் 1,000இற்கும் மேற்பட்ட அதிநவீன கெமராக்கள் பொருத்தப்பட்டு, கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

**144 தடை உத்தரவு**

செங்கோட்டை வளாகத்தில் 144 தடை உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது. பட்டங்கள், பலூன்கள், ட்ரோன்கள் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது. ட்ரோன்களைக் கண்டறியும் அதிநவீன ரேடார்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மணிப்பூர் மாநிலத்தில் மைத்தேயி- குகி இன மக்கள் இடையே கடந்த 3 மாதங்களுக்கும் மேலாக மோதல் நீடித்து வருகிறது. அந்த மாநிலத்தைச் சேர்ந்த போராட்டக் குழுவினர் சுதந்திர தின விழாவின்போது டில்லியில் குவிந்து போராட்டம் நடத்தக்கூடும் என்று உளவுத் துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. பொது சிவில் சட்டத்தை எதிர்ப்பவர்கள், விவசாயிகள் தரப்பில் போராட்டம் நடத்த வாய்ப்புள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இதை கருத்திற்கொண்டு டில்லியில் பஸ், ரயில் நிலையங்கள், ஹோட்டல்கள், தங்கும் விடுதிகளில் பொலிஸார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

டில்லி செங்கோட்டையில் பிரதமர் மோடி இன்று காலை தேசியக் கொடியை ஏற்றிவைக்கவுள்ளார். முன்னதாக, செங்கோட்டைக்கு வரும் அவரை பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் உள்ளிட்டோர் வரவேற்று அழைத்துச் செல்வர். பாதுகாப்புப் படை வீரர்களின் மரியாதை உள்ளிட்ட சம்பிரதாய நடைமுறைகளுக்குப் பின்னர் பிரதமர் கொடியேற்றி வைக்கவுள்ளார்.

**10ஆவது முறையாகவும் தேசியக் கொடியேற்றும் மோடி**

கடந்த 2014ஆம் ஆண்டுமுதல் 10ஆவது முறையாகவும் பிரதமர் மோடி செங்கோட்டையில் தேசியக் கொடி ஏற்றவுள்ளார். அப்போது 21 குண்டுகள் முழங்கப்படவுள்ளதுடன், உள்நாட்டுத் தயாரிப்பான மார்க்-3 துருவ் ரகத்தைச் சேர்ந்த 2 அதிநவீன இலகு ரக ஹெலிகொப்டர்கள் மூலம் மலர் தூவப்படவுள்ளது.

**1,800 சிறப்பு விருந்தினர்கள் பங்கேற்பு**

இதனையடுத்து நாட்டு மக்களுக்கு பிரதமர் மோடி உரையாற்றுவார். கடந்த 10 ஆண்டுகால ஆட்சியின் சாதனைகள், 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் உள்ளிட்டவை தொடர்பாக பிரதமர் மோடி உரையாற்றுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அவரது உரையின் முடிவில், தேசிய மாணவர் படையினர் தேசிய கீதம் பாடுவார்கள். இந்த விழாவில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்கவுள்ளனர்.

சிறப்பு விருந்தினர்களாக விவசாயிகள், தொழிலாளர்கள் உள்ளிட்ட 1,800 பேர் கலந்துகொள்வனர். அமெரிக்க எம்.பிக்கள் ரோ கன்னா, மைக்கேல் வோட்ஸ் உள்ளிட்டோர் அடங்கிய குழுவினரும் பங்கேற்பர்.

# வெள்ளத்தில் மிதக்கும் ஹிமாச்சல்: இடிபாடுகளில் சிக்கி 29 பேர் பலி!





ஹிமாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட மேக வெடிப்பு, மழை வெள்ளத்தில் வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதுடன், கோயில் இடிந்து வீழ்ந்த சம்பவங்களில் சிக்கி 29இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

தென்மேற்குப் பருவமழை காரணமாக வட மாநிலங்கள், குறிப்பாக ஹிமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட் உள்ளிட்ட மாநிலங்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஹிமாச்சலில் மட்டும் இந்தப் பருவமழை தொடங்கியதிலிருந்து இதுவரை 250இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். ஹிமாச்சலில் பிலாஸ்பூர், சம்பா, ஹமீர்பூர், காங்ரா, குலு, மாண்டி, சிம்லா, சீர்மார், சோலன், உனா, கினார், லாஹால், ஸ்பிதி உள்ளிட்ட பல மாவட்டங்களில் கடும் மழை வெள்ளத்தில் பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். உத்தரகாண்டில் 6 மாவட்டங்களுக்கு ரெட் அலர்ட் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஹிமாச்சலப் பிரதேசத்தில் சோலன் மாவட்டத்தில் ஜடோன் கிராமத்தில் ஏற்பட்ட மேக வெடிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் ஏற்பட்ட வெள்ளத்தில் பல வீடுகள் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

**இடிந்து வீழ்ந்த சிவன் கோயில்**

சிம்லாவில் சம்மர்ஹில் பகுதியிலுள்ள சிவன் கோயிலொன்று இடிந்து விழுந்ததில் 9 பேர் உயிரிழந்தனர். சம்பவம் நடந்தபோது கோயிலில் 50 பேர் இருந்ததாகத் தெரிகிறது. சம்பவ இடத்தில் தீயணைப்புத் துறையினர், மாநில பேரிடர் மேலாண்மைக் குழுவினர் மீட்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கோயில் இடிபாடுகளுக்குள் இன்னும் 20 முதல் 25 பேர் வரை சிக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கூட்டுப்போர் பயிற்சியில் இறங்கிய அமெரிக்கா - தென்கொரியா



வடகொரியாவின் அச்சுறுத்தலுக்குப் பதிலடியாக அமெரிக்க மற்றும் தென்கொரிய இராணுவம் இணைந்து எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் 31ஆம் திகதிவரை மிகப்பெரிய கூட்டுப்போர் பயிற்சி நடத்தவுள்ளன.

அண்மையில் ஆயுதத் தொழிற்சாலைகளை பார்வையிட்ட வடகொரிய ஜனாதிபதி கிம் ஜோங் உன், போருக்குத் தயாராகுமாறு இராணுவ அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வடகொரிய ஜனாதிபதியின் இந்த உத்தரவைத் தொடர்ந்து, அமெரிக்காவும் தென்கொரியாவும் பல்லாயிரக்கணக்கான வீரர்களைக்கொண்டு இதுவரை இல்லாதளவில் மிகப்பெரிய போர் ஒத்திகை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளன.

இந்த போர்ப் பயிற்சி அணு ஆயுத போருக்கான ஒத்திகை என வடகொரியா கண்டனம் தெரிவித்துள்ளது

# சூரியனை ஆய்வுசெய்ய தயாராகும் ஆதித்யா-எல்1




சூரியனை ஆய்வுசெய்வதற்காக விண்ணுக்கு அனுப்பப்படவுள்ள ஆதித்யா - எல் 1 விண்கலம் தயார் நிலையில் உள்ளதாக இஸ்ரோ அறிவித்துள்ளது.

பி.எஸ்.எல்.வி. - சி57 ரொக்கெட் மூலம் எதிர்வரும் செப்டெம்பரில் அந்த விண்கலத்தை ஏவ விஞ்ஞானிகள் திட்டமிட்டுள்ளனர். பூமியிலிருந்து சுமார் 15 இலட்சம் கிலோமீற்றர் தூரத்தில் சூரியனை நோக்கி அந்த விண்கலம் நிலைநிறுத்தப்படவுள்ளதாக இஸ்ரோ தெரிவித்துள்ளது.

சூரியனின் காந்தப்புலம், சூரியனால் பூமியில் ஏற்படும் மாற்றங்கள், சூரியனின் வெளி அடுக்கு, புற ஊதாக்கதிர்களை அந்த விண்கலம் ஆய்வுசெய்ய உள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

சூரிய புயல், அது எவ்வாறு உருவாகிறது, அதன் தாக்கம் குறித்தும் ஆராயப்படவுள்ளதாக விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

# கற்கோவளம் இராணுவ முகாமை அகற்றாதீர்!

**பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்**







யாழ்ப்பாணம், பருத்தித்துறை கற்கோவளம் பகுதியிலுள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாமெனக் கூறி பிரதேச மக்கள் நேற்று (14) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த ஆர்ப்பாட்டம் இராணுவ முகாமுக்கு முன்பாக இடம்பெற்றது.

பொலிஸார் மீது நம்பிக்கை இல்லை. பருத்தித்துறை பொலிஸார் கஞ்சா கடத்தல்காரர்களுடன் தொடர்பு வைத்து சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதில்லையென மக்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர்.

இராணுவத்தின் மீது எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. கற்கோவளம் பகுதியில் அமைந்துள்ள 4ஆவது சிங்க ரெஜிமெண்ட படையணி இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் என யாழ். மாவட்ட இராணுவத் தளபதியிடம் கோரிக்கை முன்வைத்து இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

தனியார் காணியிலுள்ள இராணுவ முகாமை மாற்றுவதாக இருந்தால் அரச காணியில் இராணுவ முகாமை அமையுங்கள் என போராட்டக்காரர்கள் கோரிக்கை விடுத்தனர்.

# மலையகம் 200 ஆவது ஆண்டு நிறைவு எழுச்சிப் பாதை யாத்திரைக்கு மாத்தளையில் வரவேற்பு











*இக்பால் அலி*

மலையகம் 200ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாண்புமிகு மலையகம் 'நேற்று இன்று நாளை' எனும் பொதுக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் "வேர்களை மீட்டு உரிமையை வென்றிடுதல்" என்னும் தொனிப்பொருளில் தலைமன்னாரில் ஆரம்பிக்கப்பட்டு மாத்தளையில் நிறைவுபெற்ற எழுச்சிப் பாதை யாத்திரையாளர்களை வரவேற்பளிக்கும் வைபவம் கடந்த சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான மண்டபத்தில் மாண்புமிகு மலையகம் 200 நேற்று இன்று நாளை என்ற விழாக் குழுவின் தலைவர் மு. சிவஞானம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

ஜூலை 29ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த ஊர்வலம் ஒகஸ்ட் 12 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 2.00 மணியளவில் மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

262 கிலோ மீற்றர் தூரப் பயணத்தை 15 நாட்களில் 61 நபர்கள் தொடராக நடந்து வந்தனர். அதேவேளை மாண்புமிகு மலையகம் என்ற பெயரில் பாடசாலை மாணவர்களின் ஊர்வலமும் மாத்தளை நகர் வீதி வலம் வந்து ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானத்தை வந்தடைந்தது.

பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயத் தலைவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான சமயத் தலைவர்கள் கலந்துகொண்டனர்.

மாத்தளை பிரதேச செயலாளர் இந்தகொட, மாத்தளை கல்வி வலயப் பணிப்பாளர் தோட்ட உட்கட்டமை, வீடமைப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் எம்.வாமதேவன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திலகர், இலங்கை தேசிய கிறிஸ்தவ சபையின் பொதுச் செயலாளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் உள்ளிட்ட பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

இதன்போது மாண்புமிகு மலையகம் நூல் வெளியீடு, பாடசாலை மாணவர்களின் கலாசார நடன நிகழ்வுகள், மாண்புமிகு மலையகம் என்ற தொனிப்பொருளில் பாடசாலை மாணவர்களுக்கிடையே நடைபெற்ற போட்டிகளில் பங்கு கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்குதல், ஊர்வலத்தின் ஞாபகார்த்தமாக கோயிலின் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட நினைவுத்தூபி திரை நீக்கம் செய்தல், மலையகம் தொடர்பான கண்காட்சிகள் எனப் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக ஊர்வலத்தில் கலந்துகொண்டவர்களை கௌரவித்தலும் ஊர்வலத்தின் இறுதிப் பிரகடனமும் இடம்பெற்றன.

# 'வேர்கள்' எனும் நூலின் வெளியீட்டு விழா





*பீ.எம் முக்தார்*

பேருவளை நகர சபையின் முன்னாள் நகர முதல்வர் மர்ஹூம் ஐ.எல்.எம்.யூஸுப் பற்றியும் அவர் வாழ்ந்த சீனன்கோட்டை சம்பந்தமான வரலாற்று குறிப்புகளையும் தாங்கிய 'வேர்கள்' எனும் நூலின் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (13) அல்-ஹுமைஸரா தேசிய பாடசாலை எஸ்.எம்.எம்.ஜாபிர் ஹாஜியார் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்றது.

நூலின் ஆசிரியர் மர்ஹூம் ஐ.எல்.எம். யூஸுப்பின் இளைய மகனான அஷ்ரப் யூஸுப்பின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.எம்.முக்தார் கலந்துகொண்டார்.

விசேட அதிதிகளாக பேருவளை மருதானை மஸ்ஜிதுல் அப்ரார் ஜும்ஆ பள்ளிவாசல் ஜமாஅத் சபைத் தலைவர் வழக்கறிஞர் அல்-ஹாஜ் எம்.ஏ.எம்.ஹனபி, பாராளுமன்ற உறுப்பினர்களான அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மற்றும் அல்-ஹாஜ் மர்ஜான் பளீள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் நூல் அறிமுக உரையை 'அரும்பு' சஞ்சிகையின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீனும் நூலின் விமர்சன உரையை ஜாமியா நளீமியாவின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷேஹ் அரபாத் கரீமும் (நளீமி) நிகழ்த்தினர்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவரும் மூத்த பத்திரிகையாளருமான அல்ஹாஜ் என்.எம்.அமீன், மேல் மாகாண சபை முன்னாள் உறுப்பினர் அல்ஹாஜ் இப்திகார் ஜமீல், பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் சுகைப் யூஸுப், சீனன்கோட்டை பள்ளிச்சங்க உப தலைவர் அல்ஹாஜ் ஏ.ஆர்.எம். ஸுலைமான், இணைச் செயலாளர் அல்ஹாஜ் எம்.எம்.ஷிஹாப் உள்ளிட்ட பள்ளிச்சங்க உறுப்பினர்கள், பேருவளை மருதானை அப்ரார் பள்ளிவாசல் நிர்வாக சபைத் தலைவர் அல்ஹாஜ் அதாஉல்லாஹ் அபூபக்கர், அல்ஹுமைஸரா தேசிய பாடசாலை அதிபர் எம்.ஸீ.இப்றாஹீம், ஓய்வுபெற்ற கல்விப் பணிப்பாளர் அல்ஹாஜ் ஏ.டபிள்யு.எம். அஜ்வாத் உட்பட உலமாக்கள், கல்விமான்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

அகில இலங்கை அஹதியா சம்மேளன தேசிய அமைப்பாளர் ஏ.எல்.எம்.அஸ்வர், சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாபூசணம் ஏ.எல்.எம்.ஸத்தார் ஆகியோர் நூல் ஆசிரியரை பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். அஷ்ஷெய்க் மக்கி மன்ஸூர் (நளீமி) நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியதோடு அபான் யூஸுப் நன்றியுரை நிகழ்த்தினார்.

# அட்டாளைச்சேனை பிரதேச ஆற்றை சுத்தம் செய்யும் பணிகளுக்கு அனுமதி

## முன்னாள் அமைச்சர் உதுமாலெப்பை தெரிவிப்பு

திகாமடுல்ல, அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்கள்

அட்டாளைச்சேனை பிரதேசத்தின் சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றின் வடிச்சலுக்கான தடைகளை அகற்றி சுத்தம் செய்யும் பணிகளை ஆரம்பிக்க நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க அனுமதி வழங்கியுள்ளதாக கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு, அட்டாளைச்சேனை பிரதேசங்களில் அமைந்துள்ள சம்புக்களப்பு வடிச்சலுக்கு தடையாக நீர்த்தாவரங்கள் நிரம்பியுள்ளதாலும் மற்றும் அட்டாளைச்சேனை, கோணாவத்தை ஆற்றின் வடிச்சலுக்கு தடையாக உள்ளதாலும் ஆயிரக்கணக்கான விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருவதுடன் இப்பிரதேசங்களில் முதலைகளின் தொல்லைகளாலும் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். எனவே, இப்பிரதேச விவசாயிகளின் நன்மை கருதியும் பொதுமக்களின் நன்மை கருதியும் இவ் வடிச்சல் பணிகளை ஆரம்பிக்குமாறு முன்னாள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதி தேசிய அமைப்பாளருமான எம்.எஸ்.உதுமாலெப்பை நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்கவை அண்மையில் நீர்ப்பாசன அமைச்சில் சந்தித்து வேண்டுகோள் விடுத்தார்.

சம்புக்களப்பு, அட்டாளைச்சேனை, கோணாவத்தை வடிச்சலை சீராக்கும் நோக்குடன் நீர்ப்பாசனத் திணைக்களத்தினால் அக்கரைப்பற்று நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்துக்கு வழங்கப்பட்ட 'எக்ஸ்வேட்டர் இயந்திரம்' நீண்ட காலமாக பழுதடைந்த நிலையில் அம்பாறை மாவட்ட நீர்ப்பாசன பொறியியலாளர் காரியாலயத்தில் நிறுத்தப்பட்டுள்ளதால் இப்பிரதேச நீர்ப்பாசன வடிச்சல் பணிகளை ஆரம்பிக்க முடியாத நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

எனவே, இவ்வியந்திரத்தை விரைவாக திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.



இவ்விடயத்தை கேட்டறிந்த நீர்ப்பாசன அமைச்சர் ரொஷான் ரணசிங்க, சம்புக்களப்பு, கோணாவத்தை ஆற்றினை சுத்தப்படுத்தும் பணிகளை ஆரம்பிக்குமாறு பணிப்பாளர் நாயகத்துக்கு பணிப்புரை வழங்கியதுடன் அட்டாளைச்சேனை, ஒலுவில், பாலமுனை பிரதேச விவசாய பாதைகளை புனரமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் பணிப்புரை வழங்கியுள்ளதாக முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெப்பை மேலும் தெரிவித்தார்.





திருகோமணமலை, சம்பூர் பகுதியைச் சேர்ந்த அருளம்பலம் குகராஜாவின் "இந்து சமய மரணக்கிரியைகளில் சவ அடக்கம் ஓர் பார்வை" எனும் நூல் வெளிமீட்டு விழா சம்பூர் கலாசார மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. சம்பூர் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில் நூலாசிரியர் சம்பூர் கலா மன்றத்தினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். இதில் இலக்கியவாதிகள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** மூதூர் செய்தியாளர்

# நூலக முகாமைத்துவ பயிற்சிநெறி





திகாமடுல்ல செய்தியாளர்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் நூலக ஊழியர்களுக்கான நூலக முகாமைத்துவம் எனும் தலைப்பிலான ஒருநாள் பயிற்சி நெறி அட்டாளைச்சேனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.சீ.அன்வர் சதாத் தலைமையில் ஒலுவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சிநெறியில் விரிவுரையாளர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம்.சாஹிர், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் வி.பிரசாந்தன், நூலகர் அன்வர் சதாத் ஆகியோர் கலந்துகொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

நீண்டகாலத்தின் பின்னர் இவ்வாறான பயிற்சி நெறியை ஏற்பாடு செய்து சிறப்பாக ஒழுங்கமைத்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கும் நூலகர் அன்வர் சதாத்துக்கும் இப்பயிற்சியில் கலந்து கொண்ட நூலக ஊழியர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபை நிர்வாகத்தின் கீழ் செயற்படுகின்ற அட்டாளைச்சேனை பொது நூலகம், பாலமுனை பொது நூலகம், ஒலுவில் பொது நூலகம், கோணாவத்தை பொது நூலகம், ஆலம்குளம் பொது நூலகம் ஆகியவற்றில் கடமையாற்றுகின்ற நூலகர்களும் நூலக ஊழியர்களும் இப்பயிற்சி நெறியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யாசகம் கேட்போரின் தொல்லை அதிகரிப்பு

## கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

நிலாவெளி செய்தியாளர்

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் யாசகம் பெறுவோரின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்லும் நிலைமை ஏற்பட்டுள்ளது. இதனால் கடற்கரைக்கு பொழுதைக் கழிக்க வரும் பொதுமக்கள் மிகவும் மனஉளைச்சலுக்கு ஆளாகுவதாக விசனம் தெரிவிக்கின்றனர்.

யாசகம் கேட்டு வருபவர்களின் நக்கல் தனமான கதைகளும் அவர்களில் சிலரின் நடவடிக்கைகளும் தம்மை அச்சுறுத்துவதாகவும் அங்கு வருபவர்கள் தெரிவிக்கின்றனர்.

யாசகம் எடுப்பதை தமது வாடிக்கையாகக் கொண்ட சிலர் சில யுக்திகளைக் கையாளுகின்றனர். அங்கு ஆண்கள் துணையின்றி வரும் பெண்களை குறிவைத்து அவர்களிடம் சென்று யாசகம் கேட்பதும் அவர்கள் வழங்காவிட்டால் அவ்விடத்தை விட்டு நகராமல் நின்று தொந்தரவு செய்வதும் சிலர் பேர்ஸ் கொண்டுவரவில்லை என்றாலும் கடற்கரைக்கு வெறும் கையுடனா வந்தீர்கள் என்று நக்கலாக கேட்பதும் குடிபோதையில் வந்து தொந்தரவு செய்வதும் எனப் பல விடயங்கள் இங்கு நடைபெறுகின்றன.

பிள்ளைகளுடன் நிம்மதியாக பொழுதைக் கழிக்கவென்று நம்பிக்கையோடு வரும் பொதுமக்கள் இவர்களினால் தாம் அச்சம் கொள்வதாகத் தெரிவிக்கின்றனர். எனவே, பொலிஸாரும் திருகோணமலை நகர சபையினரும் மேற்படி விடயத்தில் தலையிட்டு திருகோணமலைக் கடற்கரை யிலிருந்து இவர்களை வெளி யேற்றி பொதுமக்களின் பாதுகாப்புக்கும் நிம்மதிக்கும் வழியேற்படுத்தல் வேண்டும் என நலன் விரும்பிகள் கோருகின்றனர்.

# ஆலையடிவேம்பு இந்துமாமன்ற 20ஆவது ஆண்டு நிறைவு விழா







ஆலையடிவேம்பு, திருக்கோவில் மேலதிக செய்தியாளர்கள்

அம்பாறை, ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத்தின் 20ஆவது ஆண்டு நிறைவு விழாவும் மன்ற மேல்மாடி கட்டடத் திறப்பு விழாவும் ஞாயிற்றுக்கிழமை (13) இடம்பெற்றதுடன் 20ஆவது ஆண்டு நிறைவு விழா நூல் வெளியீடும் நடைபெற்றது. அகில இலங்கை இந்துமாமன்ற அனுசரணையுடன் ஆலையடிவேம்பு பிரதேச இந்துமாமன்றத் தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் இடம்பெற்ற இந்துமாமன்ற ஒன்றுகூடல் நிகழ்வுகளில் அருளாளராக ரிஷிகேஸ், இமயமலை சுவாமி நித்தியானந்த சரஸ்வதி மகராஜ் கலந்து கொண்டார்.

பிரதம அதிதிகளாக அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் மா.தவயோகராஜா மற்றும் அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் ஆகியோர் கலந்து கொண்ட னர்.

விசேட அதிதிகளாக அகில இலங்கை இந்துமாமன்ற பொதுச் செயலாளர் வே.கந்தசாமி, பொருளாளர் திருமதி.அபிராமி கைலாசபிள்ளை, பிரதித் தலைவர் விடைக்கொடிச் செல்வன் சி.தனபாலா மற்றும் சிறப்பு அதிதிகளாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவீந்திரன் கோடீஸ்வரன் உள்ளிட்டவர்களும் பங்கேற்றனர்.

அத்துடன், கலை நிகழ்வுகளை நடத்திய மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டதுடன் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கான உலருணவுப் பொதிகளும் அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைகளும் அகில இலங்கை இந்துமாமன்ற அனுசரணையுடன் வழங்கி வைக்கப் பட்டன.

மேலும், மன்றத்தின் வளர்ச்சிக்காக உழைத்த சிரேஷ்ட உறுப்பினர்கள் மற்றும் பிரதம அதிதிகள், சிறப்பு அதிதிகள் உள்ளிட்டவர்கள் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியில் காணப்படும் இரத்த தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யுமுகமாக அக்கரைப்பற்று அஹ்லுஸ்ஸுன்னா ஜும்ஆ பள்ளிவாசலினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்ததான முகாம், நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுத்தலைவரும் அக்கரைப்பற்று தத்பீகுஷ் ஷரிஆ அரபுக்கல்லூரியின் அதிபருமான அஷ்-ஷெய்க் எம்.ஐ.அன்ஸார் (தப்லிகி) தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (13) பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது.

**படங்கள்:** மீரா நகர், அட்டாளைச்சேனை மத்திய செய்தியாளர்கள்

# கல்முனை ஜம்இய்யத்துல் உலமா பிரதிநிதிகள்- ஹரிஸ் எம்.பி.சந்திப்பு

மாளிகைக்காடு செய்தியாளர்

கல்முனையின் வளர்ச்சிக்காக அனைத்து தரப்பினர்களும் கருத்து வேறுபாடுகளைத் தவிர்த்து ஒன்றிணையும் அவசியத்தை வலியுறுத்திய கலந்துரையாடல் ஒன்று ஞாயிற்றுக்கிழமை(13) இரவு இடம்பெற்றது.

அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் கல்முனைக் கிளை உறுப்பினர்களுக்கும் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரிஸ் எம்.பியுடனான சந்திப்பே கல்முனை பள்ளி வீதியில் அமைந்துள்ள பாராளுமன்ற உறுப்பினரின் காரியாலயத்தில் இடம்பெற்றது.

கல்முனை மக்கள் எதிர்நோக்கும் சமூக, சமய, கலாசார மற்றும் பொருளாதார பிரச்சினைகள் பற்றியும் கல்முனையின் எதிர்கால நலத்திட்டங்கள் குறித்தும் இதன்போது விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.



இதன்போது போதைப்பொருள் பாவனையினால் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளின் பின்னடைவுகள், சமூக -கலாசார ஒழுக்க விழுமியங்களின் சீரமைப்பு மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

குறித்த பிரச்சினைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகளிடம் கலந்துரையாடி தக்க தீர்வைப் பெற்றுத்தருவதாகவும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா கல்முனை கிளையின் நலத்திட்டங்களுக்கு பூரண ஒத்துழைப்பு நல்குவதாகவும் தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வதாகவும் இதன்போது ஹரிஸ் எம்.பி. உலமாக்களுக்கு உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பின்போது அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா கல்முனை கிளையினால் 'வேற்றுமையில் ஒற்றுமை' எனும் தொனிப்பொருளில் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com





புதிய காத்தான்குடி அல்-அக்ஸா ஜும்ஆ பள்ளிவாசலின் கீழ் இயங்கும் குர்ஆன் மதரஸாவில் புனித அல்-குர்ஆனை ஓதி முடித்து பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்ததுடன் மாணவர்களுக்கான சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார். அல்-அக்ஸா பெரிய பள்ளிவாசலின் தலைவர் கே.எல்.எம்.பரீட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் காத்தான்குடி நகரசபை முன்னாள் உறுப்பினர் முஹம்மது ஜவாஹிர், குர்ஆன் மத்ரஸாக்கள், அபிவிருத்தி ஒன்றியத்தின் உறுப்பினர்கள், உலமாக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

**படங்கள்:** நிந்தவூர், மாளிகைக்காடு செய்தியாளர்கள்

# யானை தினத்தை முன்னிட்டு கார்ட்டூன் சித்திரக் கண்காட்சி





நிந்தவூர் செய்தியாளர்

உலக யானைகள் தினத்தை முன்னிட்டு அம்பாறை வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களம் பிரதேச செயலகங்களுடன் இணைந்து ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கார்ட்டூன் சித்திரக் கண்காட்சி அம்பாறை மற்றும் உகணை பிரதேசங்களில் சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

இலங்கையில் அருகிக் கொண்டு செல்லும் யானைகளை பாதுகாப்பதுடன், மனித -யானை மோதலை தவிர்க்கும் வகையிலும் அனைத்தையும் உள்ளடக்கிய கார்டூன் சித்திரங்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அரச - தனியார்துறை ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் பெருமளவில் கண்காட்சியைக் கண்டுகளித்தனர். யானைகளுடன் பழகுதல், அன்பு செலுத்துதல், அவற்றுக்கு உணவளித்தல், பாதுகாத்தல் தொடர்பில் இதன்போது விளக்கமளிக்கப்பட்டது.

# சேவைநலன் கௌரவிப்பு

திராய்க்கேணி செய்தியாளர்



அக்கரைப்பற்று ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரால் ஆன்மீகப் பணியில் வைரவிழா காணும் அக்கரைப்பற்று ஜம்இய்யத்துல் உலமா சபையின் முன்னாள் தலைவரும் தற்போதைய போஷகருமான மௌலவி எம்.எம்.அப்துல் லத்தீப்பின் (பஹ்ஜி) பணியைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

நம்பிக்கையாளர் சபைச் செயலாளர் அஷ்-ஷெய்க் ஏ.எம்.ரகுமதுல்லாஹ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று சமூகம் சார்பில் 'மறை சுமந்து தீன் காத்தவர்' எனும் சிறப்பு பட்டம் வழங்கி, பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் மற்றும் பாராட்டுப்பத்திரம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள், எ.எல்.எம். சபூர், எ.எல்.தவம், ஏ.எல்.நுபைல் மற்றும் மௌலவி ஏ.கே.ஸியாத் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# கறுவாப் பயிர்ச்செய்கையை ஊக்குவிக்க மானிய விலையில் கன்றுகள் விநியோகம்

மட்டக்களப்பு

ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வழிகாட்டலுடன் கறுவாப் பயிர்ச்செய்கையானது கோறளைப்பற்று வடக்கு, வாகரை, மண்முனை தென்மேற்கு(பட்டிப்பளை) மற்றும் ஏறாவூர்ப்பற்று (செங்கலடி) ஆகிய மூன்று பிரதேச செயலகப் பிரிவுகளில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதேபோன்று இவ்வருடமும் கறுவாப்பயிர்ச் செய்கையின் விஸ்தீரணத்தை அதிகரிப்பதற்கு ஏற்றுமதி விவசாயத்திணைக்களம் திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தில் கடந்த நான்கு வருடங்களாக பதிவு செய்யப்பட்டுள்ள தன்னாமுனையில் அமைந்துள்ள வீ.சுதாகரன் என்பவரினால் திணைக்களத்தின் வழிகாட்டலுக்கமைய இவ்வருடமும் 15,000 இற்கும் மேற்பட்ட கறுவாக்கன்றுகள் மற்றும் 2,000இற்கும் மேற்பட்ட கமுகுக் கன்றுகளும் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

இக்கன்றுகள் எதிர்வரும் ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் திணைக்களத்தினால் சான்றுபடுத்தப்பட்ட விவசாயப் பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிறிய அளவிலான வீட்டுத்தோட்டத் திட்டத்தில் ஒரு விவசாயப் பயனாளிக்கு 100 தொடக்கம் 250 வரையான கறுவாக்கன்றுகளும் புதிய மீள்நடுகையில் ஒரு விவசாயப் பயனாளிக்கு 900 கறுவாக்கன்றுகளும் பிரதேச செயலகங்கள் ஊடாகத் தெரிவு செய்யப்பட்ட விவசாய முயற்சியாளர்களுக்கும் மானிய விலையின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளது.



இதற்கான விண்ணப்பப் படிவத்தை சகல பிரதேச செயலகங்களிலும் உள்ள விவசாயப் பிரிவுகளிலும் மாவட்டச் செயலக மாவட்ட விவசாயப்பிரிவிலும் பெற்றுக்கொள்ளலாம். அல்லது ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் இணையத்தள முகவரியான www.dea.gov.lk இனுள் பிரவேசித்து விண்ணப்பப்படிவத்தை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இவ்விண்ணப்பப் படிவங்களை உரிய முறையில் பூரணப்படுத்தி குறித்த பிரதேச செயலகப்பிரிவு அல்லது மாவட்ட செயலக விவசாயப்பிரிவில் ஒக்டோபர் மாதம் 15ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்க வேண்டும். அதன் பின்னர் இப்பரிசோதனை திணைக்கள உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ளப்படும். ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தினால் தெரிவு செய்யப்பட்ட விவசாய முயற்சியாளர்களுக்கு வழங்கப்படும் 5 - 6 கன்றுகளைக் கொண்ட கறுவா நாற்றுப் பொதியின் மானிய விலை ரூபா 7.00 ஆகும். இதன் அடிப்படையில் கன்றுகளுக்கான பணத்தொகையை ஏற்றுமதி விவசாயத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் இலங்கை வங்கி கணக்கிலக்கத்துக்கு வைப்பிலிட்டு பெறப்படும் பற்றுச்சீட்டை மட்டக்களப்பு மாவட்ட செயலக விவசாயக்கிளையில் ஒப்படைத்து அங்கு வழங்கப்படும் வழங்கல் கட்டளையை தன்னாமுனையில் அமைந்துள்ள மேற்கூறப்பட்ட நாற்றுமேடையாளரிடம் வழங்கி கன்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

கறுவாக்கன்றுகளின் நடுகைமுறை, கன்றுகளைப் பயிற்றுவித்தல் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிநெறிகள் மட்டக்களப்பு மாவட்ட விவசாய விரிவாக்கல் உத்தியோகத்தரினால் ஒழுங்கு செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பான மேலதிக விளக்கங்களை மட்டக்களப்பு மாவட்ட செயலக விவசாயப் பிரிவிலுள்ள ஏற்றுமதி விவசாயத்திணைக்கள உத்தியோகத்தர்களை பிரதி திங்கள் மற்றும் புதன்கிழமைகளில் மு.ப. 8.30 தொடக்கம் பி.ப. 4.15 வரை நேரடியாகச் சென்று பெற்றுக்கொள்ளலாம்.

# சாணக்கியன் எம்.பிக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி அறிவிப்பு

மட்டக்களப்பு செய்தியாளர்

எமது கட்சியின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சந்திரகாந்தனுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தொடர்ச்சியாக பொது இடங்களிலும் அபிவிருத்தி குழுக் கூட்டங்களிலும் உண்மைக்குப் புறம்பான செய்திகளைத் தெரிவித்து வருவதனால் அவருக்கு எதிராக விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினருமான பூ.பிரசாந்தன் தெரிவித்துள்ளார்.

அவரது கட்சி அலுவலகத்தில் திங்கட்கிழமை(14) இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கருத்து தெரிவித்தார். இதன்போது மேலும் அவர் தெரிவிக்கையில், உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு தொடர்பில் சாணக்கியன் எம்.பி. அண்மையில் எமது கட்சியையும் அதனுள் உள்ளீர்த்து தெரிவித்துள்ள கருத்து தொடர்பில் அவருக்கு எதிராக வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளோம்.

குறிப்பாக, எமது அரசியல் இருப்பை அழிக்கும் நோக்குடனும் குண்டு வெடிப்புடன் சம்பந்தப்படுத்திய கூற்றுக்கு எதிராகவும் நாம் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அவர் தெரிவித்த கருத்துகள் உண்மைக்குப் புறம்பானவை என அவர் ஒத்துக்கொள்ளாத பட்சத்தில், அவருக்கு எதிராக நீதிமன்ற நடவடிக்கைகளை நாம் முன்னெடுக்கவுள்ளோம்.



நாட்டின் ஜனாதிபதியின் வேண்டுகோளின் பெயரில் 13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக எமது கட்சியின் தலைவர் அது தொடர்பான ஆலோசனைகளையும் முன்மொழிவுகளையும் ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

அதில் 13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டுமெனவும் மாகாண சபைக்குரிய அதிகாரங்கள், மத்திய அரசாங்கத்துக்குரிய அதிகாரங்களை என அவை வரையறுக்கப்பட வேண்டுமெனவும் ஏற்கனவே மீளப் பெறப்பட்ட அதிகாரங்கள் மீண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்தின்படி அவை வழங்கப்பட வேண்டும் என்றார்.

மாகாண சபை கலைக்கப்பட்டால் தேர்தல் சட்டதிட்டத்தின்படி அடுத்த மாகாண சபைக்குரிய அமர்வு தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். வெளிநாட்டு முதலீடுகளை மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் கொண்டுவர மத்திய வங்கி அனுமதி வழங்க வேண்டும். மாவட்ட ரீதியான அபிவிருத்திகளை முன்னெடுக்க துறைசார் அதிகாரிகளை நியமிப்பதும் மாவட்ட செயலாளரை நியமிப்பது சம்பந்தமாகவும் மாகாண சபைக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் நாம் தெளிவாகக் கூறியிருக்கின்றோம். நீண்ட கால யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வுகளை வழங்க இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தின் ஊடாக நமது கட்சி நடவடிக்கைகளை எடுக்கும் - என்றார்.

# நிர்வாகத் தெரிவும் கௌரவிப்பும்



மாளிகைக்காடு செய்தியாளர்

பொதுமக்களினால் தெரிவுசெய்யப்பட்ட மாளிகைக்காடு அந்நூர் ஜும்ஆ பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையினரின் அறிமுகமும் கடந்த கால நிர்வாகத்தில் சிறப்பாக இயங்கிய செயலாளர் அபூபக்கர் அஹமட் றியாஸுக்கான கௌரவிப்பும் அந்நூர் ஜும்ஆ பள்ளி வாசலில் நிர்வாக சபைத் தலைவர் ஏ.பௌசர் தலைமையில் நடைபெற்றன.

புதிய நிர்வாக சபையினராகத் தெரிவுசெய்யப்பட்டவர்களை நிர்வாக சபையின் உப செயலாளர் யூ.எல்.என்.ஹுதா பொதுமக்கள் மற்றும் ஜமாத்தினருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அந்தவகையில் புதிய நிர்வாக சபைத் தலைவராக ஏ.பௌசர், செயலாளராக எவ்.எம்.ரஃபி, பொருளாளராக சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரப் வித்தியாலய ஆசிரியர் எம்.எவ்.எம்.றிபாஸ், உப தலைவராக அட்டாளைச்சேனை கல்வியியற்கல்லூரி உத்தியோகத்தர் ஏ.எம்.ஜாஹீர் (ஜே.பி.), உப செயலாளராக கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள், ஆணைக் குழு உறுப்பினர், சிரேஷ்ட ஊடகவியலாளர் யூ.எல்.என்.ஹுதா உமர், கணக்கு பரிசோதகராக மௌலவி ஏ.எல்.ஏ.சுஜா (ஸஃதி, பின்னூரி) ஆலோசகராக எம்.ஐ. இஸ்திகார் ஆகியோருடன் மேலும் 18 நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

இதன்போது முன்னாள் செயலாளர் அபூபக்கர் அஹமட் றியாஸ் நினைவுச்சின்னங்கள், பரிசில்கள், பாராட்டு சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டார். உலமாக்கள், முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.பர்ஹான், மாளிகைக்காடு கிழக்கு கிராம சேவகர் ஏ.எம்.நஜீம் உட்பட பிரதேச பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.






ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாசவின் 'சக்வல - பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தின் கீழ் பாடசாலைகளுக்கு பஸ் கையளிக்கும் நிகழ்வு சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயத்தில் திங்கட்கிழமை(14) இடம்பெற்றது. கல்லூரி அதிபர் திருமதி யூ. நஜீபா ஏ.றஹீம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஐ.ம.சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப்பாளர் எம்.ஏ.ஹஸன்அலி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஐ.மன்சூர், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் ஐ.எல்.எம்.மாஹீர், கல்வி அதிகாரிகள், பிரதேச செயலாளர் உட்பட அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

**படங்கள்** சம்மாந்துறை செய்தியாளர்

# பரீட்சை எழுதும் மாணவர்கள் மீது அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும்

## வலயக் கல்விப் பணிப்பாளர் சுஜாதா குலேந்திரகுமார்

ஆரையம்பதி செய்தியாளர்

பரீட்சைக்குத் தோற்றவுள்ள க.பொ.த.சாதாரணதர மாணவர்கள் மற்றும் க.பொ.த. உயர்தர மாணவர்கள் மீது அதிபர்கள் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் வரவு இல்லை என அதிபர்கள் கூறுவார்களேயானால், அவர்கள் அதிபர்களாக இருந்து பயனில்லை என மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் தெரிவித்தார்.

வலயத்துக்குட்பட்ட பாடசாலை மாணவர்களின் எதிர்கால பரீட்சை அடைவுமட்ட பகுப்பாய்வும் அது தொடர்பாக அதிபர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டமும் மட்./ சிசிலியா பெண்கள் உயர்தர தேசிய பாடசாலையில் அண்மையில் இடம்பெற்றன.

இதில் தலைமை வகித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், ஒரு பாடசாலையில் அதிபர்களின் வகிபாகம் மிகவும் பிரதானமானது. ஒரு அதிபர் பாடசாலையை விட்டு வெளியேறுகின்ற பொழுது அந்தப் பாடசாலையில் கடமையாற்றிய அதிபரை வாழ்த்துவதானாலும் தூற்றுவதானாலும் இவருடைய சேவைக் காலத்தில்தான் இது இவ்வாறு நடந்தது என்பதனை சமூகம் கூறிக் கொண்டே இருக்கும்.

எனவே, பாடசாலையின் முன்னேற்றகரமான செயற்பாடோ சரிவு நிலையோ அதிபர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. இன்று நான் பல பாடசாலைகளில் அவதானித்த ஒரு விடயம் பரீட்சை எழுதும் மாணவர்கள் அதிபர்களின் கைகளில் இல்லை. இது ஒரு ஆரோக்கியமான போக்கு அல்ல. எப்போதும் பரீட்சை எழுதும் மாணவர்களின் கடிவாளம் அதிபர்களின் கைகளிலேயே இருக்க வேண்டும்.



பாடசாலை நேரங்களில் எந்தவிதமான கூட்டங்களையும் நடத்தாதீர்கள். முழு நேரமும் ஆசிரியர்களை கற்பிக்க அனுமதியுங்கள். நாள்தோறும் வகுப்புகளுக்கு செல்லுங்கள். வகுப்பறையில் என்ன நடந்திருக்கிறது என்பதை அவதானியுங்கள். கற்றல் செயற்பாடு ஒழுங்காக இடம்பெறுகிறதா என்பதனை அவதானிக்க விசேட குழு ஒன்றை அமைத்து அதனை மேற்பார்வை செய்யுங்கள். எமது வலயத்தினால் மாணவர்களின் நலன் கருதி என்னென்ன நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமோ அத்தனையையும் நாங்கள் நேரம் காலம் பாராது செய்து வருகின்றோம். நான் மாத்திரம் வலயத்தை கொண்டு நடத்த முடியாது. காத்திரம் மிக்க அதிபர், ஆசிரியர்களின் தியாக சிந்தனைகளும் அர்ப்பணிப்பும் எம்மோடு கரம் கோர்க்க வேண்டும்.

தேசிய மட்டத்தில் எமது வலயம் பேசப்படுகின்றபொழுது அந்தப் பெருமை அனைவரையும் சார்ந்தது. அதேசமயம், சரிவு நிலை நோக்கி கல்விப் புலமை நகர்கின்றபொழுது அந்தப் பொறுப்பையும் நாம் ஏற்க வேண்டும். எனவே, அதிபர்கள் விழிப்புணர்வுடன் செயற்பட்டு இம்முறை சகல பரீட்சைகளிலும் மாணவர்களை முதன்மைப்படுத்த முயற்சி எடுங்கள் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் அதிபர்கள் உட்பட பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ஊருக்குப் பெருமை தேடிக்கொடுத்த சாய்ந்தமருது கலாசார மாணவர்கள்



பொலிவேரியன் செய்தியாளர்

கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் நடத்தப்பட்டுவரும் பிரதீபா - 2023 போட்டியின் ஓர் அங்கமான மாகாண மட்டப்போட்டிகள் மட்டக்களப்பு பிள்ளையாரடி மகா வித்தியாலயத்தில் சனிக்கிழமை (12) இடம்பெற்றது.

இதில் சாய்ந்தமருது கலாசார மத்திய நிலையம் முதல் முறையாகக் கலந்துகொண்டு சிரேஷ்ட போட்டியான கோலாட்டத்திலும் மற்றும் கனிஷ்ட போட்டியான ரபான், கோலாட்டம் போட்டிகளிலும் கலந்து கொண்டது. இந்த இரண்டு பிரிவுகளில் கோலாட்டம் சிரேஷ்ட நிகழ்ச்சியில் 83 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப்பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கனிஷ்ட பிரிவு போட்டியில் ரபான், கோலாட்டம் 73 புள்ளிகளோடு இரண்டாமிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. குறித்த இரண்டு போட்டிகளின் வெற்றியும் சாய்ந்தமருது வரலாற்றில் பாரியதொரு வெற்றியாகும்.

கோலாட்ட பிரிவு மாணவர்களான எம்.எவ்.எம்.றிஹ்பத், ஏ.ஜீ.எம்.ஆஸிப், என்.ஹம்தி, என்.எம்.இஷாம், ஜே.எம்.றிப்காஸ், என்.நப்ரின், ஜே.எம்.ஷாபீத், என்.எம்.அல்தாப், ஏ.எம்.எம்.நுஸ்கி, என்.எம்.எம்.றுக்ஸான், ஏ.எம்.அஸ்ரி, ஏ.எம்.ஹபீஸ், ஜே.எம்.ஜகி, ஏ.எம்.எம். அர்ஷிக், எவ்.எம்.ஹசீன், எஸ்.எம்.சௌஸான், எச்.எம்.அப்ரத், ஜே.எம்.சஹ்ரான், என்.ரீ.எம்.அஸ்ரிப் மற்றும் ரபான் - கோலாட்ட பிரிவு மாணவர்களான ஜே.எம்.ஜரிஹ், எம்.எவ்.எம். அஸ்பல், எம்.எவ்.எம். பஹட், ஏ.ஆர்.எம்.சப்கி, என்.அமைத் அஹமட், எஸ்.எம்.ஏ.மஹ்தி, எம்.ஆர். இஸ்ஸத், எம்.ஐ.எம்.அபான், எஸ்.எம். ஆதிப், எம்.பிஸ்மில்லாஹ், எம்.ஏ.எம்.அப்துல் ஹாதி, எப்.எம்.பர்ஹான், ஆர்.ஏ.எம்.அஹ்னாப், மற்றும் கலாசார மத்திய நிலையத்தில் இம் மாணவர்களைப் பயிற்றுவித்த வளவாளர்களான, எம்.ஐ.எம். அமீர்(ஆசிரியர்) எம்.ஐ. அலாவுதீன், எம்.எச்.பைசர், ஏ.எல். எம்.சாஜி (ஆசிரியர்) மற்றும் எஸ்.எச்.ஏ. கபூர்(வாத்தியம்) மற்றும் கலாசார மத்திய நிலையத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.பி.நௌசாத், சிரேஷ்ட அண்ணாவியார் ஏ.இஸ்ஸதீன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

சாய்ந்தமருதில் நீண்டகாலமாக கலாசார நிகழ்வுகள் தொடராக நடந்து வருகின்றன. இருந்தபோதிலும் அடிப்படை வசதிகள்கூட இல்லாத நிலையில், சாய்ந்த மருது கலாசார மத்திய நிலையம் வைபவ ரீதியாக இன்னும் திறக்கப்படாத நிலையிலும் இவ்வெற்றி கிடைத்தமை சவாலானதொரு விடயம். இதற்கு பின்புலமாக இருந்து செயற்பட்ட சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் மற்றும் இம்மாணவர்களை போட்டியில் பங்குபற்ற அனுமதி வழங்கிய கல்முனை சாஹிராக் கல்லூரி அதிபர் எம்.ஐ.எம்.ஜாபீர் மற்றும் சாய்ந்தமருது அல்-ஜலால் பாடசாலை அதிபர் எஸ்.சைபுதீன், மாணவர்கள், பெற்றோர்கள் ஆகியோருக்கும் நிலையப் பொறுப்பதிகாரி யூ.கே.எம்.றிம்ஸான் நன்றி தெரிவித்தார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



ரணிலுடன் கைகோர்க்க வருமாறு சம்பந்தருக்கு பிரதமர் தினேஷ் அம்மாச்சி அழைப்பு விட்டதாக ஒரு செய்தியை பார்தன்..!அடே தினேஷ் ரணிலோட நல்லாட்சி அரசாங்கத்தில சம்பந்தரும், சுமந்திரனும் கைகோர்து எலுவா 16, எம்பியை 10, ஆக குறைந்தது..!இப்ப அந்த நரியோட கைகோர்த்து 10, ஆக இருக்கிற எம்பிகள 05, ஆக மாற்றலாம் அதுக்காகவா அவரோட கைகோர்த்து வில்லுப்பாட்டு பாட வரச்சொல்லுறியள்....!முதலில சம்பந்தர் கைகோர்த்து கூத்தாட முந்தி விக்கினேஷ்வரன் கைகோர்த்து என்னத்த புடுங்கினவர் எண்டதயும் ஒள்ளுப்பம் சொன்னா சோக்கா இருக்கும்......!



மண்முனை தென் எருவில் பிரதேச செயலகப் பிரிவில் உள்ள மூத்த கலைஞர்களுக்கான வருடாந்தக் கொடுப்பனவு காசோலைகள் அலுவலகத்தில் வைத்து உதவி பிரதேச செயலாளர் சத்தியகௌரி தரணிதரன், மட்டக்களப்பு மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஜெயினுலாப்தின் ஆகியோரால் பிரதேச செயலக கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ராஜதிலகன் சகிதம் வழங்கப்பட்டது.

**படம்:** கல்லாறு செய்தியாளர்



வவுனியா கல்வி வலயத்தில் கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவர்களுக்கு தேவையான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் ச.சண்முகரத்தினம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலையின் பகுதித்தலைவர் திருமதி. தனபாலசிங்கம், ஆசிரியர்களான திருமதி ப. சிவக்குமார், திருமதி. எஸ். தவநேசன் ஆகியோரும் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான பெ. விவேகானந்தன், கோ. சிவானந்தன் ஆகியோரும் கலந்து கொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பாதணிகள் என்பவற்றை வழங்கிவைத்தனர்.

**படம்:** மாளிகைக்காடு செய்தியாளர்

# மகளிர் உலகக் கிண்ண அரையிறுதிப் போட்டியாளர்கள்




அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகியவை இணைந்து நடத்தும் மகளிர் உலகக்கிண்ண அரை இறுதிப் போடியில் விளையாட ஸ்பெய்ன், சுவீடன், அவுஸ்திரேலியா இங்கிலாந்து ஆகிய நாடுகள் தகுதி பெற்றுள்ளன.முன்னாள் உலகக்கிண்ணச் சம்பியன்கள் அனைதும் வெளியேறிவிட்டன. அரை இறுதிப் போட்டியில் விளையாடும் அணிகள் பற்றிய ஒரு பார்வை:-



**அவுஸ்திரேலியா**

அமெரிக்காவில் 1999 ஆம் ஆண்டு நடைபெற்ற மகளிர் உலகக் கிண்ணப் போட்டிக்குப் பின்னர் காலிறுதியில் வென்ற போட்டியை நடத்தும் நாடு அவுஸ்திரேலியா. தரவரிசையில்12 ஆவது இடத்தில் உள்ளது அவுஸ்திரேலியா. ஏனைய மூன்று நாடுகளும் அவுஸ்திரேலியாவுக்கு முன்னால் உள்ளன.

சூப்பர் ஸ்டார் சாம் கெர், காயமடைந்துள்ளார். கெரின் வெற்றிடத்தை நிரப்ப களமிறங்கிய 20 வயதான மேரி ஃபோலரின் ஆட்டத்தால் அவுஸ்திரேலியர்கள் உற்சாகமடைந்துள்ளனர்.

**இங்கிலாந்து**

ஐரோப்பிய சம்பியனான இங்கிலாந்து 37 போட்டிகளிலும் ஒரே தோல்வி, நான்கு மாதங்களுக்கு முன்பு அவுஸ்திரேலியாவிடம் நடந்த நட்பு ஆட்டத்தில் 2-0 என்ற கணக்கில் தோற்றதுதான். இப்போது தொடர்ந்து மூன்றாவது உலகக் கிண்ண அரையிறுதியில், இங்கிலாந்து தனது முதல் இறுதிப் போட்டிக்கு முன்னேற சொந்த அணியை வீழ்த்த வேண்டும்.

**சுவீடன்**

சுவீடனின் தற்போதைய அணி பெண்கள் கால்பந்தாட்ட வரலாற்றின் "கோல்டன் ஜெனரேஷன்" என்று பெயரிடப்பட்டுள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு டோக்கியோவில் ஒலிம்பிக் தங்கப் பதக்கத்தை வென்றது.உலகக் கிண்ணப் போட்டியில் 2003 இல் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. மூன்று முறை மூன்றாவது இடத்தைப் பிடித்தது.

**ஸ்பெய்ன்**

காலிறுதியின் கூடுதல் நேரத்தில் 2019 ரன்னர்-அப் நெதர்லாந்தை 2-1 என்ற கணக்கில் வென்று அரையிறுதி யில் இடத்தைப் பிடித்த முதல் அணி ஸ்பெய்ன். இரண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடியபோது காலிறுதிக்கு முன்னேறியதில்லை.

ஸ்பெய்னும் சுவீடனும் உலகக் கிண்ணப் போட்டியில் சந்தித்ததில்லை. ஸ்பெய்ன் முதல் ஆறு போட்டிகளுக்கு கூட தகுதி பெறவில்லை. ஆனால், கடந்த ஒக்டோபரில் ஸ்பெயினின் கோர்டோபாவில் நடந்த நட்பு ஆட்டத்தில் 1-1 என டிரோ ஆனது.

தற்போது விற்பனையில்!
ஜீனியர் வழங்கும்
தமிழன்
2023ஆம் ஆண்டுக்கான
தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை
'வெற்றிக்கு வழிவகுக்கும்'
விசேட மாதிரி வினாத்தாள் பொதி




பிரபல புலமைப்பரிசில் ஆசிரியர்களால்
தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது
பாடசாலைகளுக்கு விசேட விலைக்கழிவு!
பிரதிகளைப் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
0777983308 / 0741684643

# இந்தியாவுக்கு எதிரான தொடரைக் கைப்பற்றியது மேற்கிந்தியா




இந்தியாவுக்கு எதிரான கடைசி ரி 20 போட்டியில் 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் மேற்கிந்திய அணி அபார வெற்றிபெற்றது. லாடெர்ஹில், இந்தியா-வெஸ்ட் இன்டீஸ் அணிகள் இடையிலான 5ஆவது மற்றும் கடைசி 20 ஓவர் கிரிக்கெட் போட்டி அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள லாடெர்ஹில் நகரில் நடந்தது. இந்திய அணியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. மேற்கு அணியில் ஓபெட் மெக்காய், ஓடியன் சுமித் நீக்கப்பட்டு அல்ஜாரி ஜோசப், ரோஸ்டன் சேஸ் ஆகியோர் சேர்க்கப்பட்டனர்.

நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடி 166 ஓடங்களை எடுத்தது. இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக யஷஸ்வி ஜெய்ஸ்வால், சுப்மன் கில் ஆகியோர் இறங்கினர். கடந்த ஆட்டத்தில் அரைச்சதம் விளாசிய இருவரும் ஏமாற்றமளித்தனர். ஜெய்ஸ்வால் (5 ) சுப்மன் கில் (9 )

இதைத்தொடர்ந்து திலக் வர்மா, சூர்யகுமார் யாதவுடன் இணைந்தார். அல்ஜாரி ஜோசப் வீசிய ஒரு ஓவரில் 3 பவுண்டரி, ஒரு சிக்சர் விரட்டிய திலக் வர்மா 27 ஓட்டங்களில் (18 பந்து, 3 பவுண்டரி, 2 சிக்சர்) ஆட்டமிழந்தார். சூர்யகுமார் யாதவ் 38 பந்துகளில் அரைச்சதத்தை எட்டினார். அவர் அடித்த 15ஆவது அரைச்சதம் இதுவாகும். அவருடன் இணைந்த சஞ்சு சாம்சன் (13 ), கப்டன் ஹர்திக் பாண்ட்யா (14 ) ஆகியோரும் நிலைக்கவில்லை. நிலைத்து நின்று ஆடிய சூர்யகுமார் யாதவ் 61 ஓட்டங்களில் (45 பந்து, 4 பவுண்டரி, 3 சிக்சர்) ஜாசன் ஹோல்டர் பந்து வீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த அர்ஷ்தீப் சிங் (8 ), குல்தீப் யாதவ் (0), அக்ஷர் பட்டேல் (13 ) ஆகியோர் விரைவில் ஆட்டமிழந்தனர். 20 ஓவர்களில் இந்திய அணி 9 விக்கெட் இழப்புக்கு 165 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி துடுப்பெடுத்தாடியபோது இரண்டு தடவை முறையே 10 மற்றும் 5 நிமிடங்கள் மழையால் ஆட்டம் தடைப்பட்டது.

166 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய மேற்கிந்திய அணியின் தொடக்க வீரர் கைல் மேயர்ஸ் 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நிகோலஸ் பூரன், தொடக்க ஆட்டக்காரர் பிரண்டன் கிங்குடன் கைகோர்த்தார். இருவரும் சிறப்பாக ஆடி அணியை வெற்றியை நோக்கி நகர்த்தினர். 12.3 ஓவர்களில் மேற்கிந்திய அணி ஒரு விக்கெட் இழப்புக்கு 117ஓட்டங்களை எடுத்திருந்தபோது மழையால் ஆட்டம் பாதிக்கப்பட்டது. சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வந்த பூரன் (47) அதிரடியில் மிரட்டிய பிராண்டன் கிங் 6 சிக்சர்கள், 5 பவுண்டரிகளுடன் 85 (55) ஓட்டங்களும், ஷாய் ஹோப் 22 (13) ஓட்டங்களும் எடுத்து கடைசிவரை ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். 18 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 171 ஓட்டங்களை எடுத்தனர். மேற்கிந்தியா வெற்றிபெற்றதுடன் தொடரையும் கைப்பற்றியது.

2016இல் டோனி தலைமையில் 1 – 0 (2) என்ற கணக்கில் தோற்ற இந்தியா 9 வருடங்கள் கழித்து ரி 20 கிரிக்கெட்டில் தோற்றது மட்டுமல்லாமல், ஒட்டுமொத்தமாக அனைத்து வகையான கிரிக்கெட்டிலும் சேர்த்து 2006க்குப்பின் 17 வருடங்கள் கழித்து முதல் முறையாக மேற்குக்கு எதிராக ஒரு 5 போட்டிகள் கொண்ட தொடரில் அவமான தோல்வியை சந்தித்துள்ளது.

# லங்கா பிரீமியர் லீக் பார்க்க வந்த பாம்பு



இலங்கையில் நடைபெற்று வரும் 2023 லங்கா பிரீமியர் லீக் ரி 20 தொடர் உச்சக் கட்டத்தை எட்டியுள்ளது. அதில் ஒகஸ்ட் 12ஆம் திகதி நடைபெற்ற 15 ஆவது லீக் போட்டியில் கண்டி ஃபால்கார்ன்ஸ் மற்றும் யாழ்ப்பாணம் கிங்ஸ் ஆகிய அணிகள் மோதின. அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கண்டி 20 ஓவர்களில் அதிரடியாக செயற்பட்டு 178/8 ஓட்டங்களைச் சேர்த்தது. அதிகபட்சமாக முகமது ஹாரிஸ் 81 (51) ஓட்டங்களும் பகார் ஜமான் 22 (17) ஓட்டங்ககளும் எடுக்க யாழ்ப்பாணம் சார்பில் அதிகபட்சமாக நுவான் துசாரா 3 விக்கெட்டுகளையும் தில்சான் மதுசங்கா துனித் வெல்லலெகே 2 விக்கெட்டுகளையும் சாய்த்தனர்.

179 ஓட்டங்களை துரத்திய யாழ்ப்பாணம் அணிக்கு மதுசங்கா 8, ரஹ்மத்துல்லாஹ் குர்பாஸ் 1, கிறிஸ் லின் 27, அசலங்கா 2 என முக்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆரம்பத்திலேயே பெரிய பின்னடைவைக் கொடுத்தனர். அதனால் 51/4 என ஆரம்பத்திலேயே சரிந்த அந்த அணிக்கு மிடில் ஆர்டரில் நட்சத்திர மூத்த வீரர் சோயப் மாலிக் நங்கூரமாக விளையாடிய நிலையில், எதிர்ப்புறம் நம்பிக்கை நட்சத்திரம் டேவிட் மில்லர் 24 (16)ஓட்டங்களையும் கப்டன் திசாரா பெரேரா அதிரடியாக 36 (20) ஓட்டங்களையும் எடுத்து ஆட்டமிழந்தனர்.

சோயப் மாலிக் 55★ (37) ஓட்டங்கள் எடுத்தும் 20 ஓவர்களில் யாழ்ப்பாணத்தை 170/6 ஓட்டங்களுக்கு கட்டுப்படுத்தி 8 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்ற கண்டி சார்பில் அதிகபட்சமாக நட்சத்திர வீரர் ஏஞ்சலோ மெத்தியூஸ் 3 விக்கெட்டுகளும் நுவான் பிரதீப் 2 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

கொழும்பில் ஆர்.பிரேமதாசா கிரிக்கெட் மைதானத்தில் விறுவிறுப்பாக நடைபெற்ற அந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் சேசிங் செய்தபோது கண்டி அணியைச் சேர்ந்த நட்சத்திர வீரர் இசுறு உடானா ஃபீல்டிங் செய்வதற்காக தனது அணி கேப்டன் சொன்ன இடத்தை நோக்கி திரும்பி பார்க்காமல் பின்வாக்கில் நடந்து சென்றார். அப்போது திடீரென்று மைதானத்திற்குள் நுழைந்த பாம்பு அவரது அருகே சென்று கொண்டிருந்தது. அதை கவனிக்காமல் கூலாக பின்னோக்கி நடந்து சென்ற அவரிடம் களத்தில் தூரத்திலிருந்து பார்த்த யாரோ "பாம்பு" என்று சைகை கொடுத்தனர். அதன் காரணமாக பக்கவாட்டில் திரும்பிய அவர் சில அடிகள் தூரத்தில் சென்ற மிகப்பெரிய பாம்பை பார்த்து "எப்பா எவ்ளோ பெருசு" என்ற வகையில் ரியாக்ஷன் கொடுத்து திடுக்கிட்டு உறைந்து போய் தலையில் கை வைத்து பின்னர் வாயில் கை வைத்து அப்படியே மைதானத்தில் அமர்ந்தார்.

தாமதிக்காமல் உடனடியாக அங்கிருந்து எழுந்த அவர் பாம்புக்கு எந்தத் தொந்தரவும் செய்யாமல் மீண்டும் பின்னோக்கி நடந்து ஃபீல்டிங் செய்வதற்காக சென்றார். அதைத்தொடர்ந்து மெதுவாக அங்கிருந்து சென்ற பாம்பு மைதானத்திற்கு வெளியே சென்றதால் 5 முதல் 10 நிமிடங்கள் வரை அந்தப் போட்டியில் பரபரப்பு ஏற்பட்டது. அந்த வீடியோ தற்போது சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது. மலைக் காடுகள் நிறைந்த தீவு நாடான இலங்கையில் பாம்புகள் நடமாடுவது சகஜம். என்றாலும், இதே தொடரின் 2 ஆவது லீக் போட்டியின்போதும் இதேபோல ஒரு பெரிய பாம்பு வந்தது.

**விளையாட்டு செய்திகள்**
thamilansports@gmail.com

# சசித்ரவுக்கு வெளிநாட்டு பயணத்தடை




இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தேசிய கிரிக்கெட் வீரர் சசித்ர சேனாநாயக்கவுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றால் வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு அவருக்கு ஆட்ட நிர்ணய சதி குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதை யடுத்து அவருக்கு வெளிநாட்டு பயணத் தடையும் விதிக்கப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கைகளை தொடங்குமாறு விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் சிறப்புப் புலனாய்வுப் பிரிவுக்கு சட்டமா அதிபர் திணைக்களம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

38 வயதான அவர், 2020ஆம் ஆண்டு லங்கா பிரீமியர் லீக்கின் முதல் சீசனில் பங்கேற்கும் இரண்டு கிரிக்கெட் வீரர்களை தொலைபேசி அழைப்புகள் மூலம் அணுகி, போட்டியின்போது ஆட்ட நிர்ணயம் செய்ய தூண்டியதாகக் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் இலங்கையின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் குற்றச்சாட்டுகளை மறுத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இன்றைய போட்டி**
LPL T20
LANKA PREMIER LEAGUE 2023
**கொழும்பு எதிர் காலி** (பி.ப. - 7.30)

# ரசிகர்களைக் கவர்ந்த உதைபந்தாட்ட அழகிகள்

ரமணி

மகளிர் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் அவுஸ்திரேலியா, நியூஸிலாந்து ஆகிய நாடுகளில் நடைபெறுகிறது. உலகின் மிகச்சிறந்த சில வீராங்கனைகள் - சிறந்த அழகிகள்: விளையாட்டிற்கு திறமை மிகவும் முக்கியமானது, ஆனால், அதனுடன் கூடுதலாக அழகிகளும் சேர்வது ரசிகர்களைக் குஷிப்படுத்தும்.விளையாட்டை மட்டுமல்லாது, அழகிகளை ரசிப்பதற்காகவும் ரசிகர்கள் மைதானத்தை முற்றுகையிடுகின்றனர்.

உலகின் மிக அழகான பெண்கள் கால்பந்து வீராங்கனைகள் பலர் இருந்தாலும், அதில் சில அழகிகளின் பட்டியல்,



**கொசோவரே அஸ்லானி**

உலகின் மிக அழகான பெண் வீராங்கனைகளில் சுவீடனைச் சேர்ந்த சர்வதேச வீராங்கனை கொசோவரே அஸ்லானி, செரியா ஏ கிளப் ஏசி மிலனின் பெண்கள் அணிக்காக விளையாடுகிறார். அஸ்லானி இன்ஸ்டாகிராமில் 322k பின்தொடர்பவர்களுடன் சமூக ஊடகங்களில் மிகவும் பிரபலமானவர்.

சல்மா செலஸ்டெ பரல்லூலோ ஐங்கோனோ

வேகமாக வளர்ந்து வரும் உதைபந்தாட்ட நட்சத்திரம் சல்மா ஸ்பெயினுக்காக விளையாடுகிறார். 19 வயதில். அவர் லிகா எஃப் கிளப் எஃப்சி பார்சிலோனாவில் இடம் பெற்றுள்ளார். இன்ஸ்டாகிராமில் சல்மாவுக்கு கிட்டத்தட்ட 150k பின்தொடர்பவர்கள் உள்ளனர்.

**நிச்செல் பாட்ரிஸ் பிரின்ஸ்**

1995 இல் பிறந்த நிச்செல் கனடாவுக்காக விளையாடுகிறார் மற்றும் உலகின் மிகவும் ஸ்டைலான பெண் வீரர்களில் ஒருவர். அவரது இன்ஸ்டாகிராமில் 21 ஆயிரம் பின்தொடர்பவர்கள் உள்ளனர்.

**மைக்கேல் அலோசி**

நைஜீரியாவில் எப்போதும் கவர்ச்சியான பெண்



வீராங்கனையாக மதிப்பிடப்படும் இவர், போட்டியில் பங்கேற்கும் மிக அழகான பெண் வீராங்கனைகளில் ஒருவர். அவரது இன்ஸ்டாகிராம் பின்தொடர்பவர்களின் எண்ணிக்கை, 113k க்கும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

**அட்ரியானா லியோன்**

கனடிய உதைபந்தாட்ட வீராங்கனைக்கு 30 வயது. தேசிய மகளிர் கால்பந்து லீக்கின் போர்ட்லேண்ட் தோர்ன்ஸ் அணிக்காக விளையாடுகிறார்.

தேசிய அணிக்காக சிறப்பாக செயற்படும் மற்றொரு கனடிய வீராங்கனை ஜோர்ட்யன் ஹுடெமா. நேஷனல் வுமன்ஸ் சாக்கர் லீக் கிளப் OL Reign க்காக விளையாடுகிறார். 1.6 மில்லியன் பின்தொடர்பவர்களின் ரசிகர்களைக் கொண்ட இவர், உலகின் மிகவும் பிரபலமான உதைபந்தாட்ட வீராங்கனை ஆவார்.



**கிகி வான் ஜான்டென்**

ஜமேக்கா உதைபந்தாட்ட அணியின் கிகி வான் ஜான்டென் உலகின் சிறந்த வளர்ந்து வரும் வீராங்கனைகளில் ஒருவர். அழகாக இருக்கும் கிகியின் கால்பந்து திறமை மேலும் அழகாக இருக்கிறது.

**அலெக்ஸ் மோர்கன்**

இன்ஸ்டாகிராமில் 10 மில்லியனுக்கும் அதிகமான ரசிகர்களுடன், விளையாட்டை விளையாடும் சிறந்த உதைபந்தாட்ட வீராங்கனைகளில் ஒருவர் மற்றும் அவர் அனைவரையும் விட மிகவும் பிரபலமானவர். அமெரிக்க அணியின் வீரர் ஒரு முழுமையான ஜாம்பவான்

**சர்கினா கர்ச்செளய்**

பிரான்ஸின் சிறந்த பெண் உதைபந்தாட்ட வீராங்கனைகளில் ஒருவரான சர்கினா மிக அழகான பெண் வீராங்கனைகளில் ஒருவராகவும் உள்ளார். அவர் டிவிஷன் 1 ஃபெமினைன் கிளப் பாரிஸ் செயிண்ட்-ஜேர்மன், பிரான்ஸ் தேசிய அணி ஆகியவற்றுக்காக விளையாடுகிறார்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7